பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 11 புதன்கிழமை (27.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 282

UNION
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகளில்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9712)

## கிளி.யில் ரயில் மோதி ஒருவர் மரணம்

(மல்லாவி)

கொழும்பில் இருந்து முற்பகல் 11.50 மணியளவில் காங்கேசன் துறை நோக்கி பயணித்த உத்தர தேவி விரைவுப் புகையிரதம் பிற்பகல் 6. 30 மணியளவில் கிளிநொச்சியில் அறிவியல் நகர் பகுதியில் புகையிரத பாதையைக் கடந்த நபர் ஒருவர் புகையிரதத்து டன் மோதுண்டு உடல் 23


## முஸ்லிம் அகதிகள் மீது பிக்குகள் மீண்டும் தாக்குதல்

(கொழும்பு)

ரோஹிஞ்சா முஸ்லிம் அகதி கள் கல்கிசையில் தங்கியிருந்த இடம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மீண்டும் பௌத்த பிக்குகள் உள்ளிட்ட கடும்போக்கு பௌத்தர்களின் முற்றுகைக்குள்ளான நிலையில் அகதிகள் முற்றாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலையில் அந்த இடத் தில் பௌத்த பிக்குகளினால் முன் னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக அந்த பகுதியில் அமைதி யற்ற சூழ்நிலை காணப்பட்டதை யடுத்து ரோஹிஞ்சாக்கள் பொலி ஸாரால் பாதுகாப்பு கருதி 02

## தியாக தீபம் திலீபனுக்கு காவடி எடுத்து அஞ்சலி



23

## தமிழ் மக்களுக்கு சுதந்திரமான உரிமை

# எங்கள் தாயக மண்ணில் எமது சமயத்திற்கே முன்னுரிமை

## இந்து அமைப்புக்கள் விரைவில் கூடி முடிவெடுக்கும்

*(யாழ்ப்பாணம்)*

இனப்பிரச்சினைக்கான தீர்வில் தமிழ்மக்களுக்கு சுதந்திரமான உரிமைகளை வழங்குவதுடன் தமிழர் தாயகத்தில் ஆதிச் சமயமாகிய இந்து சமயத்துக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்ற கோசத்துடன் அனைத்து இந்து அமைப்புக்களும் விரைவில் ஒன்று கூடி முடிவெடுக்கவுள்ளதாகத் தெரியவருகிறது. (23ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பும் - ஜே.வி.பியும் அரசின் பங்காளர்கள் – பீரிஸ் சாடல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி)யும் அரசாங்கத்தின்பங் காளர்கள் என ஒன்றிணைந்த எதிர்க் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் 23

## முள்ளிவாய்க்காலில் கைக்குண்டுகள் மீட்பு

(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் மேற்கு கிரா மத்தில் வெடிக்கும் நிலையிலுள்ள கைக்குண்டுகள் நேற்றையதினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் மேற்கு கிரா மத்தைச் சேர்ந்த காணி உரிமை யாளரொருவர் தனது காணியை துப்புரவு செய்து கொண்டிருந்த நிலையில் கைக்குண்டுகளை அவ தானித்துள்ளார். 23

## தமிழ் மக்களுக்கான தீர்வு பின்னோக்கியே நகர்வு!

### சுரேஷ் பிரேமச்சந்திரன் விசனம்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக திலீபன் போராட ஆரம்பித்து முப் பது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலை யிலும் இன்னமும் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பசி, தமிழ்மக்களினுடைய உரிமைகள் என்ற விடயம் போன்றன பின் நோக்கி நகர்த்தப்பட்டுள்ள 23

## அதிரடிப்படை வருகையால் நல்லூரில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூரில் தியாகதீபம் திலீபனின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வு நேற்று செவ்வாய்க் கிழமை பகல் எழுச்சி பூர்வமாக இடம்பெற்றது. இந்த நிலையில் நல்லூர் பின் வீதியிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு அண்மையில் பத்திற்கும் மேற்பட்ட விசேட அதிரடிப்படையினர் வருகை தந்தமையால் அப்பகுதியில் பர பரப்பு ஏற்பட்டது.

இதன் காரணமாகத் திலீபனின் நினைவிடத்திற்கு அஞ்சலி செலுத் தச்சென்ற பொதுமக்கள் 23

## மக்கள் கருத்துக்களம்

அன்பு வாசகர்களே...!

இடைக்கால வரைபு தொடர்பில்

உங்கள் கருத்துக்களை முன்வையுங்கள்.

உங்கள் கருத்துக்களை அனுப்ப...

வைபர் செயலி : 076 636 3378
தொலைபேசி : 021 567 1530
மின்னஞ்சல் : valampurii@yahoo.com
தபால் : ஆசிரியர், வலம்புரி, யாழ்ப்பாணம்.

## இளைஞர்களின் வேகம் முதியவரின் உயிரைப் பறித்தது

(யாழ்ப்பாணம்)

அதிவேகமாக மோட்டார் சைக் கிளில் சென்ற இளைஞர்கள், நாயு டன் மோதுண்டு விபத்துக்குள்ளான தில் வீதியில் நின்றிருந்த வயோதிபர் ஒருவர் அதே விபத்தில் சிக்கி பரிதாப மாக உயிரிழந்துள்ளார். யாழ் ஒஸ்மானியா கல்லூரி 23

## விக்னேஸ்வரன் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச் சர் சி.வி.விக்னேஸ்வரன் யாழ்ப் பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக 23

## சுங்கத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக பீ.எஸ்.எம்.சார்ள்ஸ்

(கொழும்பு)

சுங்கத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் நியமிக் 23

## வித்தியா : தீர்ப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் பெரும் அதிர் வலைகளையும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருந்த புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை சம்பவத்தை யாரும் மறந்துவிட முடியாது.

குறித்த மாணவியின் படுகொலை சம்பவத்தின் வழக்கு விசாரணை கள் நிறைவடைந்துள்ள நிலை யில் அனைவரும் பரபரப்புடன் எதிர் பார்த்திருக்கும் தீர்ப்பு இன்றைய தினம் அறிவிக்கப்படவுள்ளது. புங்குடு தீவு 10 ஆம் வட்டாரத் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.

**GUNA BEST PC 0779086737**

லப்டொப் கணினிகள் திருத்தம் விற்றல் வாங்குதல்

**LAPTOP COMPUTERS CCTV CAMERA**
**REPAIR SALE PURCHASE INSTALLATION**

கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்

522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்

(436)



## கோழிக்குஞ்சுகள் விற்பனை

கிளிநொச்சியில்...

புறொயிலர் கோழிக்குஞ்சு - 01 - 95/=

ஊர்க் கோழிக்குஞ்சு - 01- 75/=

**தொடர்பு: 0779337287** (சி-9049)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## தவறிவிட்டது

இராசேந்திரம் லோகேஸ் என்பவருடைய பேஸ், ஆள் அடையாள அட்டை, வேலை அடையாள அட்டை, வாகன சாரதிப் பத்திரம், உந்துருளி வாகன அனுமதிப்பத்திரம், வாகன காப்புறுதிப்பத்திரம், BOC ATM, அடைவுத் துண்டு என்பன மன்னார் பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தகுந்த சன்மானம் வழங்கப்படும்**

**தொடர்பு:-0775941348** (சி-9762)

## முஸ்லிம் அகதிகள்...

வேறிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். இதனையடுத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டகாரர்கள் கலைந்து சென்றிருந்தனர்.

மாலையில் மீண்டும் ரோஹிஞ்சாக்கள் தங்கியிருந்த இடத்திற்கு அழைத்து வரப்பட்டு தங்க வைக்கப்பட்டிருந்தனர். இது பற்றி அறிந்த பௌத்த பிக்குகள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான கடும் போக்கு பௌத்தர்கள் மீண்டும் அந்த இடத்தில் கூடினர். இதனால் அமைதியற்ற சூழ்நிலை காணப்பட்டது.

அவர்கள் தங்கியிருந்த வீடு கல் வீச்சு தாக்குதலுக்குள்ளானது. யன்னல்கள் சேதமடைந்தன. வீட்டு கதவுகள் உடைக்கப்பட்டன. சில வீட்டு உடைமைகளும் சேதமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து அவர்கள் தொடர்ந்து அந்த இடத்தில் தங்கியிருக்க முடியாத நிலையில் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். பொலிஸாரால் பாதுகாப்பாக அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (மு-11)

## மணி விழா வாழ்த்துக்கள்

இன்று மணிவிழாக் காணும் மாண்புறு ஆசிரியை

**திருமதி அமரசோதி மகேந்திரராசா**

*(BA.Dip In Edu)*

அவர்களின் சேவைக்குத் தலை வணங்குகிறோம்



**28 வருட சேவையில்**

01.யா/நாரந்தனை றோ.க வித்தியாலயம்-1989.05.02-1995.08.31 வரை

02.யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி-1995.09.01-2000.02.07 வரை

03.யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்-2000.02.08-2017.08.28 வரை

ஓய்வுக் காலத்திலும் தம் இறைபணி தொடரவும் நிறை வாழ்வு வாழவும் வாழ்த்தும்

யாழ்.நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயக் குடும்பம்

(691)


## பணியாளர் தேவை

பிரபல்யமான உணவு விடுதி, உல்லாசப் பயணிகள் விடுதிகளுக்கு பணியாளர்கள் தேவை.

I. காசாளர்
(மூன்று மொழிகள் தெரிந்தவர் விரும்பத்தக்கது)

II. சிட்டை எழுதுநர்
(மூன்று மொழிகள் தெரிந்தவர் விரும்பத்தக்கது)

III. சமையலாளர்

IV. பரிமாறுநர்
(மூன்று மொழிகளும் தெரிந்தவர் விரும்பத்தக்கது)

தங்கியிருந்து வேலை செய்பவர் விரும்பத்தக்கது, தங்குமிடவசதியும் தகுந்த சம்பளமும் கொடுக்கப்படும்.

29,30.09.2017 வெள்ளி மற்றும் சனிக்கிழமை நேரில் சமுகம் தரவும்.

**0212225876, 0776016310** (சி-9760) **இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.**



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (697) (1604)



CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூட்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us cnrworldwideexpress

(C-9744)


## ஆறாத் துயருடன் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

உள்ளம் மகிழ 28 12 1991

உள்ளம் நெகிழ 01 10 2014



**நவரட்ணம் துஷிகேசன் (துஷி)**

(2ம் வருட முகாமைத்துவ வணிகபீட மாணவன் யாழ்.பல்கலைக்கழகம், யாழ்/மத்திய கல்லூரி, பழைய மாணவன்)

**எங்கள் துஷிக்குட்டி**

ஆண்டுமோ மூன்றாகி விட்டது. எங்கள் அன்புச் செல்வமே
உன் நினைவு தினமும் எம்மை வாட்டுகிறது, ஐயா!
அன்பு மொழி பேசி எம்மை அன்பாய் அழைப்பாய்
காலையில் பள்ளி செல்ல அம்மம்மாவுக்கு வந்து சொல்லி
விட்டுச் செல்வாயே. மறக்க முடியவில்லை.
கல்வியில் உயர்வு காட்டி எல்லோரையும் மகிழ்வித்தாய்
நாம் மகிழ்ந்திருந்த வேளை காலனவன் ஒரு நொடியில்
உன்னைக் கவர்ந்து சென்றானே
உன்னை கவர்ந்த இறைவன் காலால் உதைத்து
மீண்டு ஒரு எம்முன் வரவேண்டுகின்றோம்.
எங்கள் ஆவி உள்ளவரைக்கும் செல்வமே உன்னை மறவோம்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(806)

No.11, முத்தமிழ் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

ஆறாத் துயருடன், பசுபதி-விஜயலட்சுமி சின்னக்கிளி அம்மம்மா குடும்பத்தினர்


# தியாகி திலீபனுக்கு தூக்குக் காவடி எடுத்து அஞ்சலி!

## நல்லூரில் நேற்று ஒன்று திரண்ட தமிழர்கள்



















இந்திய அரசிடம் ஐந்தம்சக் கோரிக்கையை முன் வைத்து உண்ணாவிர தமிருந்து உயிரிழந்த தியாக தீபம் திலீபனின் 30ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று நல்லூரில் பெரும் எழுச்சியுடன் நடைபெற்றது. தியாகி திலீபன் உண்ணாவிரதத்தினை ஆரம்பித்த நல்லூர் வடக்கு வாசலில் ஒன்று கூடி அஞ்சலி செலுத்திய பின்னர் திலீபனது நினைவுத் தூபியில் பிரதான நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்த நிகழ்வுகளில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். இதன் போது தமிழ் அரசியல் வாதிகளும் முன்னாள் போராளிகளும் பங்கேற்றனர். இதன் போது முன்னாள் போராளி ஒருவர் கைதடியிலிருந்து திலீபனது நினைவுத் தூபி வரை தூக்குக் காவடி எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-உ.சாளின்)

## விசேட அமர்வுக்கு விசேட பாதுகாப்பு

நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு 70 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 3ஆம் திகதியன்று விசேட நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ளது.

இந்த விசேட அமர்வை யொட்டி விசேட பாதுகாப்பு மற்றும் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாடாளுமன்றம் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. இதன் போதே, மேற்கண்டவாறு அறிவிப்பு விடுக்கப்பட்டது. (இ-7)

## 5-ம் திகதி தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு

(கொழும்பு)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 5 ஆம் திகதி வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.எம். என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 20 திகதி நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சுமார் மூன்று இலட்சத்து 56 ஆயிரம் மாணவர்கள் தோற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரோஹிஞ்யா அகதிகள் இலங்கையில் கைது

(கொழும்பு)

மியன்மார் ரோஹிஞ்யா அகதிகள் சிலரை பொலிஸார் கைதுசெய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஆணையர் அலுவலகப் பாதுகாப்பின் கீழிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொருத்த தேரர்கள் அடங்கிய குழுவொன்று மேற்கொண்ட தேடுதலின் பின்னரே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மியன்மார் ரோஹிஞ்யா அகதிகளுக்கு இந்நாட்டில் அடைக்கலம் கொடுப்பதற்கு தன்னுடைய தலையீடு இருப்பதாக சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையத்தளங்களில் வெளியாகியுள்ள செய்திகளுக்கு எதிராக கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் றிசாத் பதியுதீன் குற்றப்புலனாய்வுப் பிரிவில் (சி.ஐ.டி) முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த டிஜிற்றல் பொருளாதாரம் அவசியம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு டிஜிற்றல் பொருளாதாரத்தை முன்னெடுப்பதன் அவசியத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.



இலங்கையில் முதல் தடவையாக வை-பை பனல் கருவிகளை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் காலிமுகத்திடலில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்காக நாடு முழுவதிலும் வை-பை வலயங்களை ஸ்தாபிக்கப் போவதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

# வாழ்த்துக்கள்

துறைசார் நுண்ணறிவும்
தனித்துவ ஆளுமையும்
விரல் மடிப்பில் புள்ளிவிபரமும்
வீழ்ந்திடாத செங்கோலும் கொண்ட

எமது வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர்

**உயர்திரு. சி. நந்தகுமார்** அவர்கள்

எமது வடமராட்சி கிழக்கு மண்ணின் கல்வி எழுச்சிக்கு ஆற்றிவரும் அளப்பரிய அர்ப்பணிப்புக்களை வாழ்த்தி மனம் நெகிழ்ந்து நிற்கின்றோம்.

யா/உடுத்துறை ம.வி
பழைய மாணவர் சமூகம்
ஐரோப்பிய ஒன்றியம்

(C-9753)

## ஓலைச்சுவடிகள் விநியோகம்

வழமைபோல் ஏட்டு ஓலைச்சுவடிகள்
எம்மிடம் இலவசமாக
பெற்றுக் கொள்ள முடியும்.

**அண்ணா தொழிலகம்**
துரை வீதி, இணுவில். (C-9765)

## ஏல விற்பனை

எமது பாடசாலையில் பாவனையிலிருந்த 3 கணனிக் கதிரைகள் 10.10.2017 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் பாடசாலையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

அதிபர்
யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
(808)



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபையின்
நீண்டகாலத் தலைவர்

## M C சுப்பிரமணியம்
அவர்களின்

# நூற்றாண்டு விழா அழைப்பு

இடம் : நிம்மர் மண்டபம், யாழ்ப்பாணம்
(யாழ் மத்திய கல்லூரிக்கு அருகாமை)
காலம் : 27.09.2017 பி.ப 2.00 மணி

சமத்துவ வாழ்வின் மலர்வுக்கான எழுச்சிக் குரல்
அடக்குமுறைக்கும் அடங்குமுறைக்கும் எதிரான மறத்தமிழன்
M C சுப்பிரமணியம் அவர்களின்
நூற்றாண்டு விழாவில் அனைவரும் ஒன்றிணைவோம்

**அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபை**

(C-9763)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தின் 21.09.2017 திகதி பிரசுரிக்கப்பட்ட ஏல விற்பனை விளம்பரத்துடன் பின்வரும் கால்நடைகளையும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. ஏனைய தகவல்களில் எவ்வித மாற்றங்களும் இல்லை.

மாடுகள்:

| இல | இனம் | வயது | பால் |
|---|---|---|---|
| 01 | ஜெர்சி கலப்பு | 11 வருடங்கள் | பசு |
| 02 | ஜெர்சி கலப்பு | 10 வருடங்கள் | பசு |
| 03 | ஜெர்சி கலப்பு | 2.5 வருடங்கள் | ஆண் |
| 04 | ஜெர்சி கலப்பு | 2.5 வருடங்கள் | ஆண் |
| 05 | ஜெர்சி கலப்பு | 21 மாதங்கள் | ஆண் |

பதிவாளர் (C-9757)

## விற்பனை முகவர் தேவை

**Raj water**

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கான விற்பனை முகவர்கள் கோரப்படுகின்றது.

(C-9753)

தொடர்புகளுக்கு:- **Raj water Kumarapuram, Mulliyawalai, Mullaitivu.**
T.P:- 021 492 8990, 076 666 2542 rajwaterssystem@gmail.com

அமரர் திரு. திருமதி
**மு. க. சின்னையா சௌபாக்கியவதி (பாக்கியம்)**
நினைவாக...
தமிழ்த் தாய் மன்றம் நடாத்தும்

# இலவச மருத்துவ முகாம்

இடம் : "பொற்கமலதேவி வாசா" 31, புதிய செங்குந்த வீதி, சட்டநாதர் வீதி ஊடாக, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
திகதி : 05,06,07 ஒக்டோபர் 2017
நேரம் : காலை 7.00 மணி முதல் 12.00 மணிவரை

- இலவச நீரிழிவு பரிசோதனை (Blood Sugar)
- இலவச இரத்த அழுத்த பரிசோதனை (Blood Pressure)

- 5ஆம் திகதி வியாழக்கிழமை போயா தினம் ஆங்கில வைத்தியர்களின் பரிசோதனை
- 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆயுர்வேத வைத்தியர்களின் பரிசோதனை
- 7ஆம் திகதி சனிக்கிழமை இயற்கை வைத்தியர்களின் சகல நோய்களுக்குமான இயற்கை வைத்தியமும் நோய்வராமல் எம்மைப் பாதுகாப்பதற்கான ஆலோசனைகள்.

இலவச நீரிழிவு பரிசோதனை செய்ய விரும்புபவர்கள் 12 மணித்தியாலங்கள் நீர், உணவு அருந்தாமல் 5ஆம் திகதி போயா தினத்தன்று காலை 7 மணிக்கு வாருங்கள். பரிசோதனை யின் பின் காலை உணவு வழங்கப்படும்.

கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே 31, புதிய செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மாலை 4.00 முதல் 6.00 மணிக்குள் 02.10.2017 இற்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டும். (0774626278) இப்படிவத்தை கத்தரித்து தபால்மூலமும் அனுப்பி வைக்கலாம்.

**மருத்துவ முகாமில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பம்**

முழுப்பெயர் (Full Name) : ..........
பிறந்த திகதி (Date of Birth) ..........
முகவரி (Address) : ..........
..........
வீட்டுத்தொலைபேசி இல. (Home Tel No.) : ..........
கைத்தொலைபேசி இல (Mobile No.) : ..........
அடையாள அட்டை இல. (Nic No.) : ..........
மின்னஞ்சல் முகவரி (E-mail) (இருப்பின்) : ..........
கலந்து கொள்ள விரும்பும் தினங்கள் : 05 ☐ 06 ☐ 07 ☐ ✓ அடையாளம் இடவும்

..........
கையொப்பம் (Signature)

# இதய அஞ்சலி



திருமதி **காந்திமதி முருகையா**
(இளைப்பாறிய ஆசிரியர்)

எங்கள் தேவஸ்தானத்தின் அறநெறிப் பாடசாலையை ஆற்றுப்படுத்திய அம்மையாரின் பிரிவு குறித்து மிகுந்த வேதனை அடைகின்றோம். தேசிய மட்டத்தில் எமது அறநெறிப் பாடசாலை பல விருதுகளைப் பெறக் காரண கர்த்தாவாக இருந்த அம்மையாரின் ஆத்மா சாந்தி பெறத் துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஆசிரியர்கள், மாணவர்கள்
துர்க்காதேவி அறநெறிப்பாடசாலை

நிர்வாக சபை
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை.

(C-9758)

# Ministry of National Integration and Reconciliation
# தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு

## Request for Proposal (RFP)
## முன்மொழிவுக்கானகோரிக்கை (RFP)

## 50,000 Brick and Mortar Type Housing Programme for North and East
## வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 50,000 நிரந்தர கல்வீடுகளை அமைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்

## Financing and Construction of 50,000 Permanent Brick and Mortar Type Houses for the Conflict Affected Families in the Northern and Eastern Provinces of Sri Lanka
## இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 50,000 நிரந்தர கல்வீடுகளை நிர்மாணித்தலும் நிதி ஈட்டலும்

1. The Government of the Democratic Socialist Republic of Sri Lanka intends to construct **50,000 brick and mortar type housing units** under contractor-driven modality for the persons affected by conflict in Northern and Eastern Provinces of Sri Lanka by using funds arranged by the bidder on a competitive soft term from reputed Donors or Financing Institutions.

2. The Chairman, Cabinet Appointed Negotiation Committee (CANC), on behalf of Ministry of National Integration and Reconciliation invites sealed Request for Proposals(RFP) from the eligible bidders (national or international or Joint Ventures) for the Construction of 50,000 permanent houses under various packages.This is organized and sliced into number of packages and each package will have 500 housing units. The total number of packages will be 100. A bidder may apply for one or more packages.

3. These houses will be individual housing units with the plinth area of 550 Sq.ftextent per house and should have two bed rooms, living room, verandah, kitchen and toilet facilities.

4. The bidder shall establish a firm commitment of funding from the reputed donors or Funding Agency or Agencies for 100% financing of the relevant package or packages of the project on competitive soft financing arrangements. The Government of the Democratic Socialist Republic of Sri Lanka or its authorized agency will enter into a financing agreement (national / international) with the reputed donor or Funding Agency/ Agencies proposed by the successful bidder. The contractor to be employed will be selected in accordance with the criteria set out in the RFP.

5. RFP will be considered through competitive bidding procedure and is open to all eligible bidder who fulfilled the minimum criteria described in the RFP document.

6.The bidder should submit confirmed financing arrangement with soft terms with a firm commitment letter from internationally or locally recognized and credibility rated bank, financial institution or donor acceptable to the Central Bank of Sri Lanka and Ministry of Finance of Sri Lanka. Financing facility for packages for which bids are submitted should be clearly confirmed without any ambiguity by the financing bank, institution or donorand should be supported with detailed Term Sheet. The financing arrangements with soft terms should be in the form of interest, grace period and repayment period.

7.Interested eligible Bidders may obtain further information from Secretary/ Programme Coordinator, Ministry of National Integration and Reconciliation and inspect the RFP documents at the address given below from 9.00 hours to 15.00 hours on working days from **2nd October 2017 to 12th November 2017**

Ministry of National Integration and Reconciliation(2nd Floor)

No.34, Narahenpita Road, Nawala, Sri Lanka.

Email address: ministrysec.nir@gmail.com

Telephone /Facsimile:Telephone : +94-11-2805360 ;

Fax : +94-11-2806530.

8.A complete set of RFP documents in English language may be purchased by eligible bidders on submission of a written application on a business letterhead to the address above and upon payment of non- refundable fee of SL Rs. 60,000.00 in cash or Bank draft (acceptable by the Central Bank of Sri Lanka) in favour of Secretary, Ministry of National Integration and Reconciliation from2nd **October 2017 to 12th November 2017 from 9.00 a.m to 3.00 p.m** on any working day.

The bidder who wishes to receive the RFP by couriers shall authorize the Ministry to do so.The Ministry will promptly dispatch the hard copy of the documents by courier service on payment of a non-refundable fee but under no circumstances will be held responsible for late delivery or loss of the documents so mailed. An additional non-refundable fee of SL Rs. 20,000.00 should be paid for dispatching the documents by courier.

9.All bids must be accompanied by a bid security as set out in the RFP. Proposals shall be submitted in one (01) original and two (02) copies delivered to the address below **on or before 2.00 p.m on 13th November 2017.**

**"Secretary, Ministry of National Integration and Reconciliation, No.34, Narahenpita Road, Nawala, Sri Lanka"**

The proposals should be submitted under **two envelops system** as set out in the RFP document. Bids shall be marked on the top left hand corner of the envelop **"RFP for 50,000 Housing Programme".**

Bids will be opened immediately after closing of bids.

10. Proposals which are received late will be rejected and returned unopened.The Ministry of National Integration and Reconciliation will not be responsible for any costs or expenses incurred by Bidders in connection with the preparation or delivery of RFP.

11. RFP Documents will be issued from 2nd October 2017

Chairman, CANC
Ministry of National Integration and Reconciliation
*No. 34, Narahenpita Road, Nawala, Sri Lanka.*

(C-132)

# யாழ். பல்கலையில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி



தியாக தீபம் திலீபனின் 30ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இன விடுதலைக்காக உண்ணா நோன்பிருந்து தனது உயிரைத் தியாகம் செய்த தியாகி திலீபனின் நினைவு நிகழ்வு 11 நாளாக தமிழர் தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்.பல்கலையிலும் தொடர்ச்சியாக இடம் பெற்ற இந்த நிகழ்வின் இறுதி நாளான நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரன் ஈகச் சுடர் ஏற்றி ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பல்கலை. பேராசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் தியாக திலீபனின் உருவப் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (படங்கள்:- பொ.சோபிகா)

## அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

வடமராட்சி வலயத்தின் பின்வரும் பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம்- தரம்-II

2. யா/கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம் - தரம் III

ஆகியவற்றின் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ் வரும் தகைமையுடைய அதிபர், ஆசிரியர்கள் குறித்த பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரி பின்வரும்தகைமையினைக்கொண்டிருத்தல் வேண்டும்.

1. தரம்II பாடசாலைக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம்-II அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

2.தரம்III பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம்III அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

3.தரம்II பாடசாலைக்கு உரிய தரத்தையுடையவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் தரம் III அதிபர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

4. தங்கள் அதிபர் தரத்திற்கு பொருத்தமற்ற பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

5.இலங்கை அதிபர்சேவையிலுள்ள அதிபர் கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 7 பொருத்தமாகாது)

6. வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

7.விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

8.விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 10.10.2017

10. விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் அறிவித்துள்ளார். (இ)

## காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து கணிகளைப் பெற்றவர்கள்!
# காணிகளின் உரிமம் உறுதிப்படுத்தக் கோரிக்கை

காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து LRC காணிகளை பெற்றவர்கள் தமது காணிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வடக்கு வலய காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் பணிப்பாளர் தி. விமலன் அறிவித்துள்ளார்.

1972 ஆம் ஆண்டு முதலாம் இலக்க காணி உச்ச வரம்பு சட்டத்தின் பிரகாரம் ஒரு நபர் வைத்திருக்கக் கூடிய ஆகக்கூடிய காணியின் உச்ச அளவு 50 ஏக்கர் (25 ஏக்கர் வயல் நிலம் 50 ஏக்கர் மேட்டு நிலம் எது எவ்வாறாயினும் மொத்தம் 50 ஏக்கர்) காணியினை வைத்துக் கொள்வதற்கு அதிகாரம் உண்டு. இதற்கு மேல் ஒருவர் வைத்திருந்தால் அதனை காணி சீர்திருத்த ஆணைக்குழு சுவீகரிப்பதற்கு அதிகாரமுண்டு. கடந்த கால யுத்த சூழ்நிலையில் வடக்கு மாகாணத்தில் காணி சீர்திருத்த ஆணைக் குழு அலுவலகம் இயங்காமல் இருந்த வேளையில் குறித்த காணிகளை மக்கள் அடாத்தாக கைப்பற்றியுள்ளனர். அவ்வாறு தாங்களாகவே அடாத்தாகப் பிடித்தவர்களும் தமது உரிமை சம்பந்தமாக எமது வலய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் மேலும் எமது காணிகளை அடாத்தாக பிடித்தவர்கள் தாங்களாகவே தனிப்பட்ட ரீதியில் அக் காணிக்குரிய உறுதிகளைமேற்கொண்டுவருகின்றதுடன் அதனை உரிமை மாற்றங்களும் செய்து வருகின்றனர். அவ்வாறு செய்யும் எவ் வித நடவடிக்கைளும் சட்ட ரீதியற்றவை. அக்காணிகளுக்கு எம்மால் வழங்கப்படும் ஆவணங்கள் மட்டுமே சட்டப்படியான ஆவணமாக கொள்ளப்பட்டு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும். மேலும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகளை பல பிரதேசங்களில் மக்கள் அடாத்தாக பிடித்து வருவதுடன் அக் காணிகளிலிருந்து மண் அகழ்தல், மரம் தறித்தல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்ட மக்களும் யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்து ள்ள வலய காணி சீர்திருத்த ஆணைக் குழு அலுவலகத்தில் காணி உரிமம் தொடர்பான நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

## விளையாட்டுத்துறையில் வடக்கு முன்னேற்றம்

கடந்த ஒரு மாதமாக மாத்துறையில் இடம்பெற்று வந்த 43ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வட மாகாணத்தின் வீரர்களும் வீராங்கனைகளும் சேர்ந்து 6 தங்கப் பதக்கங்கள், 13 வெண்கலப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள் உட்பட 21 பதக்கங்களைப் பெற்றனர்.

இதனால் எட்டாவது இடத்திற்கு வடமாகாணம் முன்னேறியுள்ளது .

வடக்கு மாகாணம் உருவாகிய காலத்தில் இருந்து விளையாட்டுத் துறையில் ஒன்பதாவது மாகாணமாக இருந்து வந்த நிலையில் விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்களின் வழி நடத்தலில் இம்முறை வட மாகாணம் எட்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. (இ-3)

## வீடு திரைப்படம் காட்சிப்படுத்தல்

மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் திரைப்படக் காட்சிப்படுத்தலில் எதிர்வரும் 29.09.2017 வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணியளவில் காலையடி, பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப உள்ளரங்கில் பாலுமகேந்திரா இயக்கிய வீடு திரைப்படம் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

திரைப்பட இரசனையை இளைஞர்கள் மத்தியில் உருவாக்கும் நோக்கத்துடன் மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் இச் செயற்பாட்டில் கடந்த மாதம் ஈரானிய இயக்குநர் மஜீதி மஜித்தின் Children of Heaven (சொர்க்கத்தின் குழந்தைகள்) திரைப்படம் தமிழ் உபதலைப்புகளுடன் காட்சிப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இராசி பலன்

27.09.2017

புரட்டாதி 11, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

சப்தமி மாலை 6.35 மணிவரை

கேட்டை முற்பகல் 10.29 மணிவரை

சுபநேரம் 4.32-6.02 மணிவரை

இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

உலக சுற்றுலா தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கார்த்திகை, ரேகினி<br>காலை 10.42 மணிக்கு<br>தனு- சந் | | ராகு |
| கேது | | | செவ் சுக் |
| | சனி சந் | குரு | சூரி புத |

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள், சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், குடும்ப சுகமுண்டு.

**கடகம்:** தொழில் முன்னேற்றம் ஏற்படும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பல நாட்களாக தள்ளிப்போட்ட வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்:** பிள்ளைகள் வழியில் பெருமைகள் கூடும் நாள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கன்னி:** கடன் சுமை குறையும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்கள் கூடும் நாள்.

**துலாம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, உடன் பிறப்புக்கள் வழிகளில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** தொழிலில் வளர்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**தனுசு:** சவால்களை சமார்த்தியமாக சமாளிப்பீர்கள், திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தொழிலில் புதிய கூட்டாளிகளை இணைக்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்களின் மத்தியில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

# ஒரே பார்வையில் நவராத்திரி வழிபாட்டு முறைகள்

## ஒன்பதாம் நாள்

| | |
|---|---|
| கோலம்போடும் பொருள் | கர்ப்பூரம் |
| கோலவகை | ஆயுதம் |
| அபிஷேகத்திற்குரிய திரவியம் | புஸ்பம்கலந்தவாசனைநீர் |
| திலகம் இடப்படும் திரவியம் | மை |
| ராகம் | வஸந்தா |
| இசைக்கப்படும் வாத்தியம் | கோலாட்டம் |
| கனிகள் | நாவல்பழம் |
| நிவேதனங்கள் | அடிசில்பால் |
| மலர்கள் | தாமரைப்பூ |
| (இலைகள்) | மருக்கொழுந்து |

தொகுப்பு:- சிவஸ்ரீ . சபா. வாசுதேவக்குருக்கள்
(வீணாகான குருபீடம்)


# அந்தியேட்டி அழைப்பிதழ்

அமரர். **அண்ணாமலை அஜந்தன்**

பிறப்பு: 1981.01.14 இறப்பு: 2017.08.28



அமரர். அண்ணாமலை அஜந்தன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 27.09.2017 புதன்கிழமை இன்று காலை 5மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோவிலடி,
பொலிகண்டி
(சி-9746)
இங்ஙனம்
குடும்பத்தினர்.

# சீரடி சாயி மூர்த்தி பிரதிஷ்டை



நல்லூர் சாயி இல்லப் பொன்விழாவை முன்னிட்டு (1967-2017), எதிர் வரும் 28.09.2017 வியாழக்கிழமை 359/32, நல்லலஷ்மி அவெனியு (கோயில் வீதி) நல்லூர் (மங்கோஸ் அருகாமை) என்ற விலாசத்தில் அமைந்துள்ள சாயி இல்லத்தில் சீரடி சாயி மூர்த்தி பிரதிஷ்டை செய்யப் படவுள்ளது.
செப்டெம்பர் 28, 29, 30 ஆகிய தினங்களில் இவ் விழாவை முன்னிட்டு அபிஷேகம், தேவபாராயணம், பஜனை, இலங்கை, இந்தியக் கலைஞர் களின் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இத் தினங்களில் அன்ன தானமும் நடைபெறும். இந் நிகழ்வுகளில் பங்களிப்புச் செய்ய விரும்புவோர், எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**குறிப்பு:** ஒவ்வொரு நாளும் காலை 7.00 மணிக்கு அபிஷேகம், 8.00 மணிக்கு காலை ஆராத்தி, நண்பகல் 12.00 மணிக்கு மதிய ஆராத்தி, 6.00க்கு மாலை ஆராத்தி, இரவு 8.00க்கு இரவு ஆராத்தி, பிரதி வியாழக்கிழமை தோறும் மாலை 5.00- 6.00 வரை பஜனை நடைபெறும்.
(667)

மேலதிக விபரங்களுக்கு: 077 487 4032, 021 222 1634 www.saiillam.ca


# தொழில் தகைமை எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில் தகைமை மட்டம் - 5 (NVQ Level-5), பரீட்சைக் கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எனவே மீள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று எதிர்வரும் 10.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)


## தேசிய மட்ட சாதனையாளர் விருது-2017

தேசிய தமிழ் மொழி தின விழாவின் ஒரு பகுதியாக தேசிய மட்டத்தில் வடமாகா ணத்தில் இருந்து சாதனை படைத்தவர்கள் கௌரவிக்கப்பட இருக்கின்றனர். வடமாகாணத்தில் இருந்து பின்வரும் துறைகளில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்தவர்களின் விண்ணப்பம் பின்வருமாறு கோரப்படுகின்றது.

**ஊடகம்-10** **கல்வி-06**
**விளையாட்டு- 06** **கலை-06**
**எழுத்தாளர்-06** **வர்த்தகர்கள்-06**

மேற்படி துறைகளில் திறைமைகளை வெளிப்படுத்திய சாதனையாளர்கள் தங்களது சுயவிபரம் மற்றும் தங்களது செயற்பாட்டுடன் தொடர்புடைய ஆவணங் களை 04.10.2017 இற்கு முன் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலமா கவோ அல்லது நேரடியாகவோ **பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக் களம் செம்மணி வீதி நல்லூர்** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோட்டுக் கொள்கின்றேன்.
ஒவ்வொரு பிரிவிற்கும் நிபுணத்துவம் பெற்ற 3 பேர் கொண்ட தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு தெரிவு இடம்பெறும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்**
**கல்வி அமைச்சு**
**வடக்கு மாகாணம்.** (சி-9751)

## ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின்
## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2018
## வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

**யாழ்ப்பாணத்தில்**
**அன்பொளி கல்வியகம்,**
**யாழ்.இந்துக் கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**சாவகச்சேரியில்**
**அன்பொளி கல்வி நிலையம்,**
**தபாற்கந்தோர் வீதி,**
**சாவகச்சேரி.**

அனுமதிகளை 25.09.2017 திங்கட்கிழமையிலிருந்து 02.10.2017 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 - 5.30 மணிவரை பெற்றுக் கொள்ளவும்.
குறிப்பு: பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

*"சின்ன விழி அசைத்து சிரித்து வரும் சித்திரங்களை*
*அள்ளி அணைத்து அரிய கல்வி மகிழ்வுடனே ஊட்டிடுவோம்"*

(C-9737) **- இயக்குநர்கள்**

இளையோர்களே,தகவல் தொழில் நுட்பத்துறையில்
வேலைவாய்ப்புபெற அரியவாய்ப்பு

ஆறுதல் நிறுவனத்தின் திறன்விருத்திசெயற்திட்டத்தில் இணைவதன் மூலம்கணனி அடிப்படைமற்றும் ஆங்கிலத்தில் பயிற்சிபெற்றுபின்னர் தகவல் தொழில் நுட்பத்துறையில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக அல்லதுசுயதொழில் ஒன்றைத் தொடங்குவதற்கானஅறிவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

Programme1 : *Specially designed for Absolute Beginners- Duration: 3 months*

***Computer Literacy & English Language Skills Development & Training Programme***
***(Covers ICT and Communicative English; Syllabus of TVEC – NVQ level 3,4)***
***Certification: Ministry of Skills Development & Vocational Training.***

குறிப்பு: ஒருபிரிவில் 15 பயிற்சியாளர்கள் மாத்திரமே உள்வாங்கப்படுவர்.

Programme2 : Customized Training for Youths & Employees on *Job Skills Development & Training on-*

1. Information Communication Technology
2. Desktop Publishing & Graphic Designing
3. Computer Hardware& Networking
4. Database Management Systems
5. Web Development & Designing
6. Software Programming
7. Soft Skills Development

குறிப்பு: மேற்குறிப்பிட்ட திறன்விருத்திப் பயிற்சிகள் குழச்செயற்பாட்டின் ஊடாக கற்பிக்கப்படும்.

Programme3: Training Programme using Social media in their Studies or in Works effectively.

மேற்குறிக்கப்பட்ட பயிற்சிகள் 29. 09. 2017 ஆரம்பிக்க இருப்பதினால் ஏற்கனவேவிண்ணப்பித்தோர் மற்றும் விண்ணப்பிக்காதோர் நிறுவனத்திற்குநேரில் வந்துபதிவுசெய்துஉறுதிப்படுத்துமாறுவேண்டப்படுகின்றீர்கள்.

பயிற்சிகளில் திறமையைவெளிப்படுத்துவோருக்குபுலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

For Information Hotline: 0772928853
Location: In Jaffna Town, near Main Bus Stand

CENTRE for IT EDUCATION
JOB SKILLS DEVELOPMENT & TRAINING
Sponsored By: RATNAM FOUNDATION
NO. 51, STMAIN ROAD, NALLUR, JAFFNA, SRI LANKA.
Phone: 021 222 7092. Fax: 021 222 7092. Web: WWW. aaruthal.lk
e-mail: aaruthaltrinco@gmail.com




தாயக மக்களின் விடுதலைக்காக இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து தன் உடலை உருக்கி எம் மக்களுக்காக இம் மண்ணை விட்டுப் பிரிந்த தியாக தீபம் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு நேற்று கிளிநொச்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலக அறிவகத்தில் நடைபெற்றது. அறிவகம் மாநாட்டு மண்டபத்தில் இளைஞர் அணியின் தலைவர் சுரேன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மதத்தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாணசபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, த.குருகுலராசா ஆகியோரும் கட்சியின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தமது மலர் அஞ்சலியை செலுத்தினர். -- (படங்கள்:-கண்டாவளை, பரந்தன் செய்தியாளர்கள்)



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சில் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் இடம்பெறும் மண்டபத்தில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அக வணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றதுடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நினைவுரைகளும் ஆற்றப்பட்டன. திலீபன் அகிம்சை வழியில் போராடியிருந்தார். அதேபோன்று நாமும் எமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு கோரி அகிம்சை வழியில் போராடி வருகின்றோம் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கருத்து தெரிவித்திருந்தனர். (படங்கள்:-பரந்தன், கண்டாவளை செய்தியாளர்கள்)

# அப்பள உற்பத்தி நிலையம் திருநகரில் திறந்து வைப்பு




கிளிநொச்சி திருநகர் பகுதியில் அப்பள உற்பத்தி நிலையம் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவினால் திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றது.


கிளிநொச்சி திருநகர் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட குறித்த அப்பள உற்பத்தி தொழிற்சாலை திறக்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் பேசி எடுக்கப்பட்ட தீர்வுகளின்டிப்படையில் ஐ.நா. மனித உரிமை பேரவையின் தீர்மானத்திற்கமைய அரசு அழுத்தத்திற்கு உள்ளான நிலையில்அதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருவது தொடர்பில் மாவை சேனாதிராஜா கருத்து தெரிவிக்கையில்,

வலி.வடக்கு பிரதேசம் தந்தை செல்வா, அமிர்தலிங்கம் தலைமை தாங்கிய தொகுதி முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில் நாம் எடுத்த முயற்சியில் முன்னேற்றம் கண்டுள்ளோம்.

90ஆயிரத்திற்கு அதிகமான பெண்தலைமைத்துவ குடும்பங்கள், உணவு ஊட்டச்சத்து இல்லாத குழந்தைகள் அதிகளவில் காணப்படுகின்றனர். அதற்காக பொருளாதாரத்தை கட்டியெழுப்பக் கூடிய திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாக தெரிவித்தார்.

போராளிகள், அங்கவீனர்கள் உள்ளிட்டவர்களின் வாழ்வாதாரத்திற்காக இங்கேயே வேலை வாய்ப்புக்களை வழங்க திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2-312)




# மின்பிறப்பாக்கி திருட்டு

(கிளிநொச்சி)

கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் வைக்கப்பட்டிருந்த மின்பிறப்பாக்கியொன்று திருட்டுப்போயுள்ளதாக கிளிநொச்சி நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்தில் வித்தியாலய அதிபரினால் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த 22 ஆம் திகதி இரவு நடைபெற்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த 22 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் மூடப்பட்ட பாடசாலை கல்வி நடவடிக்கைக்காக மறுநாள் காலை திறக்கப்பட்ட போது மின்பிறப்பாக்கிவைக்கப்பட்டிருந்த அறை உடைக்கப்பட்டு மின் பிறப்பாக்கி திருட்டுப் போனமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து பாடசாலை அதிபரினால் கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரை ந்த பொலிஸார் கைரேகை அடையாளத்தை பதிவு செய்ததுடன் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (2)

# மதத்தலைவர்கள் -பொலிஸாருக்கு இடையில் விசேட கலந்துரையாடல்



கிறிஸ்தவ மதத் தலைவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. நேற்று பிற்பகல் 5.30 மணியளவில் குறித்த சந்திப்பு கிளிநொச்சி பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. குறித் சந்திப்பில் பொலிஸாருக்கும் மதத் தலைவர்களுக்குமிடையிலுமான நல்லுறவை கட்டியெழுப்பும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவ மதத் தலைவர்களும் அங்கு கலந்து கொண்டிருந்ததுடன், பொலிஸ் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். (2-312)

# மகளை காணவில்லை; தாயார் முறைப்பாடு

மன்னாரில் இளம் பெண் ஒருவர் காணாமல் போயுள்ளதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவரது தாயாரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னாரில் இருந்து முல்லைத்தீவு தண்ணீரூற்றில் உள்ள அவரது மாமியாரை சந்திக்க கடந்த 22ஆம் திகதி சென்ற சிறிதரன் அருள்சீலி என்ற தனது மகள் இதுவரை மீண்டும் வீடு திரும்பவில்லையெனவும் இவருக்கு வெளிநாட்டில்இருக்கும்நபருடன் திருமண ஏற்பாடுகள் நடைபெற்றிருந்த நிலையிலேயே இவர் காணாமல் போயுள்ளதாகவும் அவரது தாயாரால் வவுனியா மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (2-9)

# 2200 மில்.ரூபா செலவில் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் வேலைத்திட்டங்கள் 2200 மில்லியன் ரூபா செலவில் நடைபெற்று வருகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் குடிநீர்த் தேவைகள் மற்றும் அடிப்படை சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் மேற்படி நிதியொதுக்கீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, துணுக்காய், வெலிஓயா ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை விநியோகிப்பதற்கு 1200 மில்லியன் ரூபா செலவிலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவு நகர நீர் வழங்கல் வேலைத்திட்டம் ஆயிரம் மில்லியன் ரூபா செலவிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. (2-315)

# அதிபரின் அலுவலகம் தீக்கிரை

வவுனியா சேமமடு சண்முகானந்தா மகா வித்தியாலய அதிபரின் அலுவலகம் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் வவுனியா வடக்கு கல்வி வலயத்தினால் பாடசாலை பரீட்சிப்பு குழு செல்ல இருந்த நிலையிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இச்சம்பவத்தினால் அதிபரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த பிரதி எடுக்கும் இயந்திரம், தளபாடங்கள், கோவைகள் முற்றாக எரிந்து நாசமாகின.

அலுவலகத்தின் முன்பக்க கதவினை இரும்புக் கம்பியால் உடைப்பதற்கு எத்தனித்தமைக்கான சான்றுகள் இருந்ததாகவும் பாடசாலை சமூகத்தினர் தெரிவிக்கின்றனர்.



இந்நிலையில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டார். இந்தச்சம்பவம் தொடர்பான விசரணை ஓமந்தை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (2-250)



தியாக தீபம் திலீபனின் 30 ஆவது ஆண்டின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வு மன்னாரில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு தியாக திலீபனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாவீரர்கள் மற்றும் போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூர்ந்து அக வணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து நினைவுப் பேருரைகள் இடம்பெற்றன. (படங்கள்:-உ.சாளின்)



தியாகதீபம் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தொடர்ச்சியாக நேற்றுடன் 203 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாகவுள்ள போராட்டக் கொட்டகையில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. திலீபனின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது. இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் கலந்து கொண்டார். (படங்கள்- பனிக்கன்குளம் செய்தியாளர்)



அகிம்சை வழியில் போராடி தன்னுயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று பிற்பகல் 3.30 மணியள்வில் கேப்பாப்பிலவில் அனுஷ்டிக்கப்பட்டது. முல்லைத்தீவு இராணுவப்படை கட்டளை தலைமையகம் முன்பாக தமது பூர்வீக நிலத்தை விடுவிக்கக் கோரி நேற்றுடன் 210 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தாம் அமைத்த கொட்டகையில் உணர்வு பூர்வமாக அஞ்சலி நிகழ்வை நடத்தினர். இதன் போது ஈகச் சுடரேற்றி திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தினர். இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ. புவனேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார். (படங்கள்-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## காணாமல் போனோரின் உறவினர்களின் உணவு தவிர்ப்பு நேற்று முடிவுறுத்தப்பட்டது



வவுனியாவில்வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட உணவு தவிர்ப்பு போராட்டம் நீராகாரம் வழங்கி நேற்று முடித்து வைக்கப்பட்டது.

வவுனியாவில் கடந்த 215 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது கோரிக்கைகளுக்கு இதுவரை ஆக்கபூர்வமான பதிலேதும் அரசினாலும் தமிழ் தலைமைகளாலும் வழங்கப்படாத நிலையில் சர்வதேசம் தமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும் எனக்கோரி இரு நாள் உணவு தவிர்ப்பு போராட்டத்தினை நேற்று முன் தினம் திங்கட்கிழமை முதல் முன்னெடுத்திருந்தனர்.

ஏ-9 வீதியில் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தினை ஆரம்பித்தனர்.

இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மாரின் உடல் நிலை சோர்வடைந்திருந்த நிலையில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் மனித உரிமைச் செயற்பாட்டாளர் அருட் சகோதரி நிக்கோலாவினால் நீராகாரம் வழங்கி முடித்து வைக்கப்பட்டது.

எனினும் தமக்கான தீர்வு வழங்கப்படாவிட்டால் விரைவில் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எச்சரிக்கை விடுத்தனர். (2-250)

## தொழிற்சாலைகள் உருவாக்கப்படுமாகில் கிராமங்கள் முன்னேற்றம் அடையும்

### கரைச்சி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

எமது பொருளாதாரம் என்பது கிராமங்களில் இருக்கின்ற பொருளாதாரங்களை வளப்படுத்துவதன் மூலம் கட்டியெழுப்பப்பட வேண்டியுள்ளது என கரைச்சிப்பிரதேச செயலாளர் ரி.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள அப்பளம் உற்பத்தி நிலையத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கரைச்சிப் பிரதேச செயலாளர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இடப்பெயர்வின் பின்னர் மக்களை மீள் குடியேற்றுவதும் அவர்களின் வாழ்வதார உதவிகளை நிறைவேற்றுவதும் அரச பணியாளர்களான எங்களின் காலங்கள் கடந்து விட்டன, அல்லது கரைந்துவிட்டன.

மீள்குடியேற்றம் நடைபெற்று எட்டு ஆண்டுகள் கடந்து விட்டன. மக்களின் அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்களை பாரியளவில் செயற்படுத்த வேண்டியுள்ளது.

அரசினாலும் மானியங்களாகவும் கிடைக்கப் பெறுகின்றவற்றை வைத்து மக்கள் வாழுகின்ற நிலையை மாற்றி மக்கள் சுயபொருளாதாரத்தை கட்டியெழுப்புகின்ற வேலைத்திட்டங்களை பாரியளவில் முன்னெடுக்க வேண்டியுள்ளது. மக்கள் தமது சுய பொருளாதாரத்தைகட்டி யெழுப்பவேண்டிய நிலையில் இது போன்ற தொழிற்சாலைகள் கிராமங்கள் தோறும் உருவாக்கப்பட வேண்டும். எமது பொருளாதாரம் என்பது கிராமங்களில் இருக்கின்ற பொருளாதாரத்தை வளப்படுவதன் மூலம் கட்டியெழுப்புமுடியும்.

இத்தொழிற்சாலையானது பல பெண்களின் வாழ்வாரத்திற்கு வழிவகுக்கும் என்பதுடன் உள்ளூர் உற்பத்தியை சுய பொருளாதாரத்தை கட்டியெழுப்புகின்ற ஆரம்பப்புள்ளியாகவும் அமையும் எனவே பல்வேறு திட்டங்களினூடாக இவ்வாறான தொழிற்சாலைகள் உருவாக்கப்படுமாயின் கிராமங்கள் முன்னேற்றம் அடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-315)

## தியாக திலீபனின் அஞ்சலி நிகழ்வு கள்ளப்பாட்டில் அனுஷ்டிப்பு



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அகிம்சை வழியில் போராடி ஈழத்தமிழ் மக்களது விடுதலைக்காக தனது உயிரை ஆகுதி ஆக்கிய தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 30 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று தமிழர்கள் வாழும் பகுதியெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும் என்று உலகத் தமிழருக்கு அறைகூவல் விடுத்த திலீபன் 5 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து இந்திய இராணுவத்தை வெளியேறுமாறும் வலியுறுத்தி 5 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து நீராகாரம் எதுவுமின்றி உண்ணா நோன்பிருந்த தியாகதீபம் திலீபன் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் இன்றைய நாளில் (நேற்றைய) தனது இன்னுயிரை ஈகம் செய்து கொண்டார்.

அந்தவகையில் நேற்றுக் காலை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் முல்லைத்தீவு கள்ளப்பாட்டிலுள்ள அலுவலகத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் திருவுருவப்படத்துக்கு ஈகை சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். (2-281)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## செந்நகரம்பழம்/செம்மரம்

Botonical Name:- Alphanamixix-polystachya

Fanily-Meliaceae

Sinh-Hingul.

நடுத்தர மரவகையைச் சேர்ந்தது. நேரான மரத்தண்டுள்ளது. மரக்கிளைகள் மிக அழகாக கிளை விட்டு வளைந்து காணப்படும். இலைகள் கூட்டிலை. இரண்டு இலையில் முடிவடையும். ஒன்றுவிட்ட கூட்டிலை அமைப்புக் கொண்டது. பெரிய இலைகள் இலைக்காம்பு கூட்டிலையில்நரம்புடன் இணையும் இடத்தில் தடிப்பாகக் காணப்படும். சிற்றிலைகள் 6-8 எதிரடுக்குச் சோடியாகக் காணப்படும். இலைக்காம்பு 7.5-12.5 செ.மீ.நீளமாகக் காணப்படும். இலைநுனி கூராகக் காணப்படும்.

ஒழுங்கான பூக்கள். மஞ்சள் நிறமானவை. பழங்கள் கோளவடிவானவை. சிவப்பு நிறமாகக் காணப்படும். பழச்சதப்பிடிப்பானவை. மெதுமையான சதையைக் கொண்டது. கோள வடிவ விதைகள். 2.5 செ.மீ. நீளமானது. கோள வடிவானது. மண்ணிறமானது. ஆடி ஆவணி மாதங்களில் பூக்களைக் காணலாம்.

இலங்கை, இந்தியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களில் பரம்பல் அதிகமாகக் காணப்படும். இலங்கையில் கடல் மட்டத்திலிருந்து



3,000 அடி உயரக் காடுகளில் வளரக்கூடியது.

இதனுடைய பட்டை, பழம், விதை, இலைகள் அனைத்தும் மருத்துவ குணம் மிக்கவை.

இதனுடைய விதையிலிருந்தும் பட்டையிலிருந்தும் பலவித glycosides (கிளைக் கோசைட்டுகள்) பிரித்தெடுக்கப்படுகிறது. இதன் விதைகளிலிருந்து பிரித்தெடுக்கப்படும் எண்ணெயில் ஸ்ரெயாரிக், பல்மிற்றிக், ஒலிக், லினோலிக் கமிலங்கள் காணப்படும்.

இம்மரத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு வெவ்வேறு மருத்துவக் குணங்கள் உண்டு. முக்கியமாக இதன் பட்டை, பழம், விதை எண்ணெய்கள்வளி, அழல் ஆகியவற்றை தன்னிலைப்படுத்தக் கூடியவை. எனவே சித்தமருத்துவத்தில் வாத, பித்த நோய்களை குணப்படுத்துவதற்காக இவை பயன்படுத்தப்படுகின்றன.

இதன் பட்டையில் துவர்ப்புச் செய்கை உண்டு. முக்கியமாக ஈரல், மண்ணீரல், சம்பந்தமான நோய்களுக்கு இதன் பட்டை சிறந்த மருந்தாகும். இதனை விட புற்றுநோய்களை தீர்க்கக்கூடிய தன்மையுமுண்டு. புற்று நோய்க்கலங்களுக்கு எதிரான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈரல் கலங்களை புதுப்பிக்கக்கூடிய தன்மை இதன் இலைகளுக்கு உண்டு. இதன் விதையிலிருந்து கிடைக்கும் எண்ணெயை மூட்டுவாதங்களுக்கு பூசலாம்.

இதன் பட்டை, இலை, பழங்களுக்கு தீங்கு விளைவிக்கும் பக்றீரியாக்கள் பங்கசு தொற்றுக்களை நீக்கும் மருத்துவ குணங்களும் உண்டு. யாழ்ப்பாண சித்த



மருத்துவ பரராஜசேகர பாலரோ நூலில் செந்நகரம் பழ நெய் (medicated ghee) கரப்பான், கிரந்தி, செம்படை, கரும்படை போன்ற நோய்களுக்கு ஓர் சிறந்த மருந்தாகும். இவ் செந்நகரம் பழ நெய்யில் உலர்ந்த செந்நகரம் பழங்கள் மேற்படி தோல் நோய்களை நீக்குவதில் சிறந்த மூலிகையாகும். செந்நகரம் பழத்தோடு வேறு பல மூலிகைச் சரக்குகளும் செந்நகரம் பழநெய்யில் சேருவது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இதன் பழங்களில் ஆய்வுக்ள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனாலும் யாழ்ப்பாண பாரம்பரிய சில வைத்தியர்களால் செந்நகரம் நெய் தயாரிக்கப்பட்டு பல நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதும் குறப்பிடப் பட வேண்டிய விடயம்.

❖ குறிப்பு. இலங்கையில் இம்மரமானது மதுரட்ட பிளான்ரேசன் (maturata - plantation) நுவரெலியா மாவட்டத்தில் இயற்கையாக வளர்ந்து காணப்படுகிறது.

சித்த மருத்துவத்தில் யாழ்ப்பாண சித்த மருந்துகளில் 2000 இற்கு மேற்பட்ட மூலிகைகளும் அதன் வெவ்வேறு பகுதிகளும் பயன்படுத்தப்படுகிறது. மூலிகைகள் உருவவியல் விஞ்ஞான ரீதியாக இனங்காண எவ்வளவிற்கு விஞ்ஞான தாவரவியற் பெயர்கள் அவசியமோ அவ்வளவிற்கு சித்த மருத்துவ மூலிகை அகராதியுள்ள வேறு பெயர்களும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். இச் செந்நகரம் பழத்திற்கு செம்மரம் வங்குல் சுரை வச்சு மரம் போன்ற வேறு பெயர்களும் உள்ளது.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## விடுதலைப்புலிகளின் நிகழ்ச்சி நிரலில் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன்

## அமைச்சர் எஸ்.பி.யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளிநாட்டில் உள்ள விடுதலைப்புலிகளின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுவதாக தெரிவித்துள்ள சமூக நலத்துறை, நல்லுறவு மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவார் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். சர்வதேச செவிப்புலனற்றோர் தினம் நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர்,நிகழ்வின் முடிவில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் புலம்பெயர் விடுதலைப்புலிகளது கருத்தாகவே உள்ளது. அவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுடைய நிகழ்ச்சி நிரலிலேயே இயங்குகின்றார்.

தமிழ் மக்களுடைய கல்விமான்கள் மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த சட்டமூலத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள். இதேபோன்று 20 ஆவது திருத்த சட்டத்தை தென்னிலங்கையில் உள்ள கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. இந்த சட்டமூலத்தின் மூலம் உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களை கடினமின்றி தெரிவு செய்ய முடியும். முன்னாள் ஜனாதிபதி தொடர்ந்து எதிர்ப்பை காட்டி வருகின்ற போதிலும், மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆரம்பகால உறுப்பினராக இருந்தவர். அவர் தற்போது எதிர்ப்பை காட்டினாலும் எதிர்காலத்தில் அவரிடையே மாற்றம் ஏற்படும் என்பது எதிர்பார்ப்பாகும். மேலும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழீழ விடுதலைப்புலிகளுடைய குரல்களையே இங்கு வெளியிட்டுக் கொண்டுள்ளார். அது நாட்டுக்கு பாதகமான சூழ்நிலைகளை தற்போது ஏற்படுத்தி வருவதாகவும் எஸ்.பி. திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை குறித்த சட்டமூலம் மாகாண சபைகளுடைய அதிகாரங்களை பறிக்கும் நோக்குடையது. அதனை தமிழர்கள் அனைவரும் எதிர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்த வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண சபையும் அதனை எதிர்க்க வேண்டும் என கோரியிருந்தார். அதனை அடுத்து வடக்கு மாகாண சபையும் குறித்த சட்டமூலத்தை நிராகரித்திருந்தது. இதனை அடுத்து உயர் நீதிமன்றமும் குறித்த சட்டமூலத்திற்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவை எனவும் அறிவித்திருந்தது.

எனினும் அவசர அவசரமாக குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க வடக்கு மாகாண முதலமைச்சர் விடுதலைப்புலிகளின் நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றார் என குற்றம் சாட்டியுள்ளார். (இ-4)

## கிழக்கின் ஆட்சியை ஆளுநரிடம் கையளிப்பதில் அதிருப்தி-மு.கா.

கிழக்கு மாகாண சபையின் ஆட்சி அதிகாரம் ஆளுநரிடம் முழுமையாக கையளிக்கப்படுவது தொடர்பில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியடைவதாக, அக்கட்சியின் பொதுச் செயலாளரும் கல்முனை மாநகர முன்னாள் முதல்வருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "இம்மாதத்துடன் ஆட்சிக்காலம் நிறைவடைந்து கலைகின்ற கிழக்கு மாகாண சபைக்கு உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடாகும்.

எனினும், மாகாண சபைத் தேர்தல் திருத்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதனால் புதிய முறையில் தேர்தலை நடத்தும் பொருட்டு தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதனால் அப்பணிகள் பூர்த்தியடைந்த பின்னர் அடுத்த வருடம் மார்ச் மாதம் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் அவர் குறிப்பிட்டுள்ள காலப்பகுதியிலாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அரசாங்கத்தை எமது கட்சி வலியுறுத்துகிறது.

இத்தேர்தலை மேலும் இழுத்தடிப்பு செய்வதற்கு எந்த வகையிலும் இடமளிக்கக் கூடாது என எமது க்ட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதமரிடம் நேரடியாக வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் கூறியிருப்பது போன்று மார்ச் மாதம் தேர்தலை நடத்துவதென்றால் மாகாண சபைத் தேர்தலுக்கான தொகுதிகளை வரையறுப்பதற்கான எல்லை நிர்ணயப் பணிகள் காலதாமதப்படுத்தப்படாமல் துரிதமாக நிறைவு செய்யப்பட வேண்டும். இது விடயத்தில் அரசாங்கம் பொறுப்புணர்வுடன் நேர்மையாக செயற்பட முன்வர வேண்டும். என்றும் செயலாளர் நிஸாம் காரியப்பர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம் சூரிசெவ் 3இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/நிரந்தர தொழில் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/7101 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம் செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/7102 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் செவ் 2இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:BBA/ சொந்ததொழில்<br>தொ.இ: B/7106 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 42<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc, MSc, QS/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/7103 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 48 உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:Civil Eng, QS/ அரசதொழில்<br>தொ.இ: B/7108 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/7104 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 39 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BBA/உதவி முகாமையாளர்<br>தொ.இ: B/7112 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 42 உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/7105 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# வைத்தியம்

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு/மார்பு/கை), ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு: Shan's Health Care.
255, K.K.S.Rd, Kokuvil
T.P:077 035 7307
(889)



## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
"மதசார்பற்றது "ரகசியமானது " இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)



# சேவை நலன் பாராட்டு

## திருமதி.கமலாதேவி சுரேந்திரா (SLTS-I)

கல்வித் தகைமை: கலைப்பட்டதாரி (தமிழ்) பட்டப்பின் கல்வி டிப்ளோமா



சேவை விபரம்:
ஆசிரியராக,
கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்.
(26.12.1985-27.06.1992)
யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.
(28.06.1992-06.07.1992)
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் (07.07.1992-14.05.2017)
பதில் அதிபராக
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் .

வாழ்வும் வாக்கும் செம்மையுற தமிழ் பாடத்திற்கோர்
மூதாட்டியாக இருந்து கல்விப் பணிக்கு 32 வருடம்
ஓய்வில்லா சேவையினை வழங்கி
இன்று (27.09.2017) புதன்கிழமை
ஓய்வுபெறும் எமது வித்தியாலயத்தின்
மாசற்ற எழுத்தறிவிக்கும் ஆசான்
திருமதி கமலாதேவி சுரேந்திரா அவர்கள்
மருதடி விநாயகரின் அருள் பெற்று
சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ
அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்.
மட்டுவில், சாவகச்சேரி.
(684)
வாழ்த்துவோர் :
பாடசாலைச் சமூகம்.


## சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சதாசிவம் மண்டபத்தில் பாடசாலை அதிபர் என். சபாரட்ண சிங்கி தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை அராலி முத்துமாரியம்மன் ஆலய குரு சிவஸ்ரீ ரி.சர்வேஸ்வரக்குருக்கள் வழங்குவார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) என். காண்டீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

## நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய அலங்கார உற்சவம்

வரலாற்று சிறப்பு மிக்க நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 30.9.2017 சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 5.10.2017 அன்று பாம்புத் திருவிழாவும், மறுநாளான வெள்ளிக்கிழமை கப்பல் திருவிழாவும், சனிக்கிழமை 7.10.2017 வேட்டைத் திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை 8.10.2017 சப்பறத்திருவிழாவும் திங்கட்கிழமை 9.10 2017 சமுத்திரத் தீர்த்தமும் செவ்வாய்க்கிழமை 10.10.2017 கேணித் தீர்த்தமும் இடம்பெறவுள்ளன. (இ-60)

## கோஷ்டி மோதலால் வரணி மக்கள் அச்சம்

வரணி பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரு குழுக்களிடையே இடம் பெற்ற கோஷ்டி மோதலால் அவ்விடத்தில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

வரணிகுடமியன் பகுதி இளைஞர் குழுவுக்கும் வரணி இயற்றாலை இளைஞர் குழுவுக்கும் இடையே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

வரணி பிரதேசத்தில் கோஷ்டி மோதல்கள் மற்றும் சமூக விரோதச் செயற்பாடுகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதால் தாம் பெரும் அச்ச நிலையிலிருப்பதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான சமூகவிரோத செயற்பாடுகளுக்கெதிராக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-102)


### ஏல விற்பனை

எமது பாடசாலையின் பழுதடைந்த தளபாடமான பாலர் கதிரை (மரம்) -05 10.10.2017 அன்று காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளது. எனவே பெற விரும்புபவர்கள் ஏலத்தில் கலந்த கொள்ளுமாறு கேட்டக் கொள்கின்றேன்.

அதிபர் (801)
யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை



### பெயர் மாற்ற அறிவித்தல்

துண்மலை வீதி, உடுவிலை வதிவிடமாகக் கொண்ட செல்வி டெய்சி துரைசிங்கம் ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் பரணி துரைசிங்கம் என பெயர் மாற்றம் செய்து இனி வரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
(802) பரணி துரைசிங்கம்



# சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்
# Kids Park Pre School & Day Care Campus

528, பலாலி வீதி, திருநெல்வேலி.

**30.09.2017 விஜய தசமி பூசையும் ஏடு தொடக்குதலும் கலை விழாவும்**
**புதிய மாணவர்கள் அனுமதியும்**

*(2+ Play Group) (3+ Montessori) (4+ Pre School)*



சிறுவர்களுக்கே உகந்த மிகப்பாதுகாப்பான, மகிழ்ச்சிகரமான சூழலில் முன்பள்ளிக்கல்வி, காப்பக அனுபவத்துடன் கூடிய குடும்ப உறவும் வாழ்வும்

உயர்தரம் வாய்ந்த பயில்வுகள்...

யோகாசனம், ஆன்மீகச் செல்நெறி, சுதந்திரமான கற்றல் வட்டக் களக் கற்கைகள், விளையாட்டு மூலம் செயல் வழிக் கல்வி, ஆடல், பாடல், ஓவியம், பொம்மலாட்டம், நாடகம், மணல் நீர் விளையாட்டுக்கள், ஆங்கில தகவல் தொழில்நுட்ப ஆற்றுகை, பங்கேற்றுக்கற்றல், நூலக அனுபவம், களச் சுற்றுலாக்கள்....

களிமண் பிசைவிலிருந்து கணனிக் கற்கை வரை ஆசிரிய அம்மாக்களின் அர்ப்பணிப்பு - அரவணைப்பினூடான முன்பள்ளிக் கல்வி

30.09.2017 காலை 8.30 மணிக்கு விஜயதசமி பூசை, கலைவிழா புதிய மாணவர்களுக்கான கற்றல் ஆரம்பமும் ஏடு தொடக்குதலும் கலாநிதி பா.தனபாலன் அவர்களால் மேற்கொள்ளப்படும். உரியவர்கள் முற்பதிவு செய்து கொள்ளவும்.

கல்விப் பணியே கடவுள் பணி | *Service to Education is Service to God.*

கலாநிதி.பா.தனபாலன் (நிபுணத்துவ ஆலோசகர்)
*M.Phil in Pre School Education*
*Phd-Pre School & Primary Education*

(688)

திருமதி. கா்ணி தனபாலன் (பணிப்பாளர்)
Dip in Pre School Education (Distinction)
Dip in Guidance & Counselling [illegible]
Cert.in Pre School Management
Msc in Pre School Curriculam & Management (Reading)




# ஜெயலலிதா மறைவில் மர்மம்!



(சென்னை)

வைத்தியசாலையில் ஜெயலலிதாவை பார்த்த விவகாரத்தில் அமைச்சர்களின் முரண்பட்ட கருத்துக்களால் சர்ச்சை எழுந்துள்ளது.

செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் செல்லூர் ராஜ் தாம் உட்பட அனைத்து அமைச்சர்களும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஜெயலலிதாவை பார்த்ததாக குறிப்பிட்டார்.

சிகிச்சை பெற்று வந்த ஜெயலிலதாவை யாரும் பார்க்கவில்லை என அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் உட்பட சில அமைச்சர்கள் தகவல் தெரிவித்த நிலையில் அமைச்சர் செல்லூர் ராஜ் வைத்தியசாலையில் ஜெயலலிதாவை பார்த்ததாக கூறி மேலும் மர்மத்தை அதிகரித்துள்ளார்.

ஜெயலலிதாவை வைத்தியசாலையில் பார்த்தோம் என சில அமைச்சர்களும் பார்க்கவில்லை என சில அமைச்சர்களும் முன்னுக்குப்பின் முரணாக தொடர் கருத்துக்களை கூறி வருவது மக்களிடையே குழப்பத்தையும் சந்தேகத்தையும் மேலும் வலுவடைய செய்துள்ளது. (3-8)

# செல்பி எடுப்பதில் நண்பர்கள் பிஸி

## நீரில் மூழ்கி பலியான 17 வயது மாணவன்



(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தில் ஏரி ஒன்றில் குளிக்கச் சென்ற நண்பர்கள் குழுவில் ஒரு மாணவன் நீரில் மூழ்கும் போது மற்ற அனைவரும் அவரைக் கவனிக்காமல் செல்பி எடுத்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளது.

கர்நாடக மாநிலம் ராமநகரா மாவட்டத்தின் அருகே உள்ள ரவகோண்ட்லு பெட்டா என்ற மலைப்பகுதியில் அருகிலுள்ள கல்லூரி மாணவர்கள் என்.சி.சி பயிற்சிக்காக முகாமிட்டுள்ளனர். இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடு முறை என்பதால் அருகிலுள்ள ஏரி ஒன்றுக்கு மாணவர்கள் குழுவாக சென்றுள்ளனர்.

ஏரியில் குளித்துக்கொண்டிருந்த போது ஒருவர் தனது தொலைபேசியில் அனைவரையும் செல்பி எடுத் துள்ளார். செல்பி எடுக் கும் நேரத்தில் குளித்துக் கொண் டிருந்த விஷ்வாஸ் என்ற 17 வயது மாணவன் தண்ணீரில் தத்தளித்த படி மூழ்கியுள்ளான். ஆனால் செல்பி எடுக்கும் ஆர்வத்தில் இருந்ததால் அவர் மூழ்குவதை மற்றவர்கள் கவனிக்கவில்லை.

சிறிது நேரம் கழித்து விஷ்வாஸை காணாததால் நண்பர்கள் அனைவரும் தேடியுள்ளனர். இறுதியில், அவர் சடலமாகத்தான் மீட்கப்பட்டார்.

இதனையடுத்து பலியான விஷ்வாஸின் உறவினர்கள் கல்லூரி நிர்வாகத்தின் கவனக்குறைவு காரணமாகத் தான் இந்த மரணம் நிகழ்ந்துள்ளதாக அவரது சடலத்தை கல்லூரியின் முன்னால் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இதனையடுத்து சம்மந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்லூரி நிர்வாகம் உறுதியளித்ததை அடுத்து அவரது உடலை அடக்கம் செய்ய எடுத்துச் சென்றனர். (3-8)

# இந்.எல்லைக்குள் ஊடுருவிய தீவிரவாதி சுட்டுக்கொலை

## ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன



(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஊரி அருகே இந்திய எல்லைக்குள் ஆயுதங்களுடன் நுழைந்த தீவிரவாதியை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஊரி அருகே உள்ள லேமரோ வார் என்ற பகுதியில் நேற்றுக் காலை பாதுகாப்புப் படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது ஆயுதங்களுடன் இந்திய எல்லைக்குள் ஒரு தீவிரவாதி நுழைந்துள்ளான். இதனைக் கண்ட பாதுகாப்புப் படையினர் அவனை சுற்றிவளைத்து தாக்கினர்.

சிறிது நேர சண்டைக்குப் பின்னர் அந்த தீவிரவாதி சுட்டுக்கொலை செய்யப்பட்டான். அவனிடமிருந்த ஆயுதங்களைப் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர். கடந்த இரு நாட்களில் இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற நான்கு பேரை பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

இதன் காரணமாக எல்லைக்கட்டுப்பாடு கோடு மற்றும் பொது வெளிகளில் பாதுகாப்புப் படையினர் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர். (3-8)

# கார் தலைகீழாக கவிழ்ந்து விபத்து

## 4 பேர் பலி

(லக்னோ)

உத்தரப்பிரதேச மாநிலம் மதுரா அருகே நேற்று அதிகாலை கார் தலைகீழாக கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதில் 4 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.


உத்தரபிரதேச மாநிலம் மதுரா மாவட்டம் அருகே உள்ள மஹாவன் பகுதியில் நேற்று அதிகாலை சொகுசு கார் ஒன்று சாலையில் சென்று கொண்டிருந்தது. சாலையின் வளைவில் திரும்பும் போது எதிர்பாராதவிதமாக இந்தக்கார் தலைகீழாகக் கவிழ்ந்தது.

இக் கோர விபத்தில் காரில் இருந்த 4 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 5 பேர் படுகாயங்களுடன் அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவ் விபத்துக் காரணமாக அப்பகுதியில் சில மணி நேரம் போக்கு வரத்து பாதிக்கப்பட்டது. (3-8)

# 18 ஆண்டுகளாக 30 பேரை கொன்று

## மாமிசம் சாப்பிட்ட கணவன் – மனைவி



(மொஸ்கோ)

ரஷ்யாவில் 18 ஆண்டுகளாக 30 பேரைக் கொன்று மாமிசம் சாப்பிட்ட கணவன்-மனைவி இருவரும் கைது செய்யப்பட்டனர்.

ரஷ்யாவைச் சேர்ந்தவர் டிமிட்ரி பக்சேவ் (வயது-35). இவரது மனைவி நடாலியா (வயது-48). தாதியாக இருந்தார்.

மனிதர்களைக் கொன்று அவர்களின் மாமிசத்தை சமைத்து குடும்பத்துடன் சாப்பிட்டு வந்தனர். இந்த விபரம் வெளியே தெரிந்தவுடன் அவர்களது வீட்டை பொலிஸார் சோதனையிட்டனர். அப்போது அங்கு 8 மனித உறுப்புகள் மற்றும் மனித சதைகள் இருந்தன.

அவற்றை குளிர்சாதனப் பெட்டியில் பதுக்கி வைத்திருந்தனர். சிலவற்றை ஜாடியில் போட்டி ஊறுகாய் போன்று ஊற வைத்திருந்தனர். அவை பறிமுதல் செய்யப்பட்டன.

அதைத் தொடர்ந்து கணவன்-மனைவி இருவரும் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டது. அப்போது 30 பேரைக் கொன்று அவர்களின் மாமிசத்தை சமைத்து சாப்பிட்டு வந்ததாக கூறினர். கடந்த 18 ஆண்டுகளாக இச் செயலில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (3-8)

# ஜெயலலிதா மர

## விசாரணை ஆ



(சென்னை)

ஜெயலலிதாவின் மரணம் குறித்து விசாரிப்பதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா கடந்த ஆண்டு செப்டெம்பர் 22 ஆம் திகதி உடல் நலக்குறைவால் சென்னை அப்பல்லோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

அவர் மரணம் குறித்த சந்தேகங்களும் கேள்விகளும் எழுந்த நிலையில், ஜெயலலிதாவின் மரணம்

# போப் ஆண்

(வாடிகன்சிட்டி)

700 ஆண்டுகளில் முதன் முறையாக மதத்துக்கு எதிரான கொள்கைகளைப் பரப்புவதாக போப் ஆண்டவர் மீது பழமைவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

றோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தின் பழமை வாய்ந்த பிரிவைச் சேர்ந்த இறைமையியல் வல்லுநர்கள், மத குருமார்கள் மற்றும் கல்வியியலாளர்கள் 62 பேர் வாடிகன் சிட்டியில் கடந்த மாதம் போப் ஆண்டவர் பிரான்சிஸிடம் 25 பக்க புகார் கடிதம் கொடுத்தனர்.

அதில் அவர் குறித்து புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. போப் ஆண்டவர் பிரான்சிஸ் கிறிஸ்தவ மதத்துக்கு எதிரான கொள்கைகளைப் பரப்பி வருகிறார் எனக் குற்றம் சாட்டியுள்ளனர். அவர் மதத்துக்கு எதிரான 7 விதமான கொள்கைகளைப் பரப்பி வருவதாக புகார் கூறப்பட்டுள்ளது. திருமணம், விவாகரத்து, மறுமணம் மற்றும்

# எந்நேரமு நிலையில் இ

## மாவட்ட பொலிஸ் ஆணையாளர்கள், அதிகாரிகளுக்கு தமிழக டி.ஜி.பி. உத்தரவு

(சென்னை)

தமிழகத்தில் அனைத்து காவல் சிறப்பு படைகளும் இன்றும் நாளையும் தயார் நிலையில் இருக்குமாறு பொலிஸ் டி.ஜி.பி. உத்தரவிட்டுள்ளார்.

இன்றும் நாளையும் நகர பொலிஸ் ஆணையாளர்கள் மாவட்ட அதிகாரிகள் துணை அதிகாரிகள் மற்றும் கமாண்டோ உள்ளிட்ட அனைத்து சிறப்பு காவல் படைகளும் தயார் நிலையில் இருக்குமாறு டி.ஜி.பி. டி.கே.ராஜேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

# வெளிநாடு

## மரணம் குறித்து விசாரிக்க ஆணையம் அமைக்கப்பட்டது



குறித்து விசாரிக்க விசாரணை ஆணையம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் பழனிச்சாமி அறிவித்திருந்தார். ஆனால் விசாரணை அதிகாரி நியமிக்கப்படாமல் இருந்தது.


இந்நிலையில் ஜெயலலிதாவின் மரணம் குறித்து விசாரணை நடத்துவதற்கான விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஜெயலலிதாவின் இறப்பு குறித்து விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க ஓய்வுபெற்ற நீதியரசர் ஆறுமுகசாமி தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்து நேற்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா அப்பல்லோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோது நாங்கள் யாரும் அவரைப் பார்க்கவில்லை. அவர் இட்லி சாப்பிட்டார் என்று பொய் சொன்னோம் என அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் கூறினார்.

முறைப்படி விசாரணைக் ஆ ை ண ய ம அமைக்கப்பட்டு விரைவில் விசாரணை தொடங்கும் என்றும் சி.பி.ஐ. விசாரணை நடத்தினாலும் தவறு இல்லை என்றும் அவர் கூறியது குறிப்பிடத்தக்கது. (3-8)

## ...ண்டவருக்கு எதிர்ப்பு



கிறிஸ்தவ ஆலயத்தில் நடைபெறும் சடங்குகளுக்கு எதிரான கருத்துக்களை கடந்த ஆண்டு வெளியிட்டுள்ளார்.

அன்பின் 'மகிழ்ச்சி என்ற தனது ஆவணத்தில் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று பழமைவாத கொள்கைகள் கொண்ட 4 கர்தினால்கள் போப் ஆண்டவருக்கு எதிராகக் கேள்விகளை எழுப்பியுள்ளனர். அவர்களுக்கு இதுவரை போப் ஆண்டவர் பிரான்சிஸ் பதில் எதுவும் கூறவில்லை.

கடந்த 700 ஆண்டுகளில் போப் ஆண்டவருக்கு எதிராக இதுபோன்ற குற்றச்சாட்டுகள் எழுந்ததில்லை.

தற்போது இது போன்ற புகார் கூறியிருப்பது கத்தோலிக்க கிறிஸ்தவர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (3-8)

## ...ம் தயார் ...ருங்கள்

அசாதாரண சூழ்நிலைகளில் பிறப்பிக்கப்படும் இதுபோன்ற உத்தரவு தற்போது திடீரென வெளியாகியுள்ளதால் மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

விடுப்பில் சென்றுள்ள காவலர்கள் உடனடியாக முகாம்களுக்கு திரும்புமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (3-8)

# எம்மீது போர் தொடுக்க டொனால்ட் ட்ரம்ப் முடிவு

## வடகொரியா தகவல்



(நியூயோர்க்)

எங்கள் நாட்டின் மீது போர் தொடுக்க ட்ரம்ப் முடிவு செய்துள்ளார் என வடகொரிய வெளியுறவுத் துறை அமைச்சர் ரி யாங் ஹூ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரத் தடைகள், உலக நாடுகளின் கடும் கண்டனங்கள் என எதையும் காதில் வாங்காமல் தொடர்ந்து நைதரசன் வெடிகுண்டு, ஏவுகணைச் சோதனையை வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது.

இது அமெரிக்காவிற்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் வடகொரியாவின் வெளியுறவு துறை அமைச்சர் ரி யாங் ஹூ நியூயார்க்கில் நிருபர்களை சந்தித்து கூறியதாவது,

வடகொரியா மீது போர் தொடுக்க டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார். எங்களுக்கு எதிரான போரை முதலில் அமெரிக்காவே அறிவித்தது என்பதை ஒட்டு மொத்த உலக நாடுகளும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

தற்கொலைப் படைத் தாக்குதல்கள் அப்பாவி அமெரிக் கர்களை பாதித்தால் அதற்கு டொனால்ட் ட்ரம்ப் தான் பொறுப்பு. எங்கள் நாட்டிற்கு எதிராக அமெரிக்கா போரை அறிவித்துள்ள நிலையில், எதிர் நடவடிக்கை எடுக்க எங்களுக்கு உரிமை உள்ளது.

வடகொரியாவின் வான் எல்லையில் பறக்கும் அமெரிக்காவின் போர் விமானங்களை சுட்டு வீழ்த்தவும் எங்களுக்கு உரிமை உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

வடகொரியாவும் அமெரிக்காவும் ஒருவருக்கொருவர் வார்த்தைகளை ஏவுகணை போல ஏவிவிடுவது உலக அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### வடகொரியா கூறுவது நகைப்புக்குரியது

வடகொரியா மீது அமெரிக்கா போர் தொடுக்கப் போவதாக கூறுவது நகைப்புக்குரியது என வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலக நாடுகளின் கடும் கண்டனங்களையும் மீறி வட கொரியா தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. இது அமெரிக்க அரசை எரிச்சலடைய செய்துள்ளது.

இதற்கிடையே எங்கள் மீது போர் தொடுக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது என வட கொரியா வெளியுறவுத் துறை அமைச்சர் ரி யாங் ஹூ தெரிவித்துள்ளது கடும் சர்ச்சையையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் நாங்கள் போர் தொடுக்கப் போவதாக வட கொரியா கூறுவது நகைப்புக்குரியது என வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ் கூறுகையில், வட கொரியா மீது போர் தொடுப்பது குறித்து நாங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை. இப்படிப்பட்ட நிலையில் நாங்கள் போர் தொடுக்க உள்ளதாக கூறுவது நகைப்புக்கு உரியதாக உள்ளது என தெரிவித்தார். (3-8)

## லண்டனில் நிலநடுக்கம்

(லண்டன்)

பப்புவா நியூகினியா தீவில் நேற்று அதிகாலை 6.0 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

பிரிட்டன் நாட்டுக்கு சொந்தமான பி.எம்.ஜி. தீவில் நேற்று அதிகாலை திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் கடலுக்கு அடியில் 5.7 கிலோ மீற்றர் தொலைவில் சுமார் 6.0 ரிக்டர் அளவுகோலாக பதிவானது என, அமெரிக்க புவிசார் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்டதன் காரணமாக சுனாமி எச்சரிக்கை ஏதும் விடப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீவு நாடான பப்புவா நியூகினியாவில் கடந்த 1998 ஆம் ஆண்டு கடலுக்கு அடியில் அடுத்தடுத்து உண்டான 7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் காரணமாக மூன்று முறை சுனாமி ஏற்பட்டு சுமார் 2,100 பேர் பலியாகியிருந்தனர். (3-8)

## வெடிக்கும் நிலையில் எரிமலை 35,000 மக்கள் வெளியேற்றம்



இந்தோனேஷியாவில் உள்ள பாலி தீவில், எரிமலை வெடிக்கும் தறுவாயில் உள்ளதால் 35,000 பேர் அந்தப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந் தோனேஷியாவின் பாலி தீவில், 'ஆகங்' என்னும் எரிமலை எப்போது வேண்டுமானாலும் வெடிக்கும் நிலையிலுள்ளது.

இந்தோனேஷிய அரசு, உயிரிழப்பு மற்றும் சேதங்களைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

எரிமலையைச் சுற்றி 12 கி.மீ. தூரத்திலுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் அப் புறப்படுத்தப்பட்டு வருகின்றனர். (3-8)

## உலகின் மிக அதிகமான எடைகொண்ட பெண் மரணம்




(டுபாய்)

உடல் எடை குறைப்புக்காக இந்தியாவில் சிகிச்சை பெற்றுசென்ற உலகின் மிக அதிகமான எடை கொண்ட எகிப்து பெண் அபுதாபியில் நேற்று முன்தினம் மரணமடைந்தார்.

எகிப்து நாட்டைச் சேர்ந்த எம்மா என்ற ( வயது-37) பெண் சுமார் 500 கிலோ நகரில் அவருக்கு சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்பட்டதையடுத்து, 323 கிலோவாக எடை குறைந்த எம்மா, மேலதிக சிகிச்சைக்காக அபுதாபியில் உள்ள புர்ஜீல் வைத்தியசாலையில் கடந்த மேமாதம் அனுமதிக்கப்பட்டார்.

சுமார் 20 சிறப்பு வைத்தியர்களின் கண்காணிப்பில் கடந்த ஐந்துமாத காலமாக



உடல் எடையுடன் உலகின் மிகவும் அதிகமான எடை கொண்ட பெண்ணாக ஊடகங்களின் கவனத்தை கவர்ந்தார். உடல் எடை குறைப்புக்காக இந்தியாவின் மும்பை அங்கு சிகிச்சை பெற்றுவந்த எம்மா, சிறுநீரகக் கோளாறால் நேற்று முன்தினம் மரணம் அடைந்ததாக புர்ஜீல் வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (3-8)

# ஐ.நா.ஆணையர் ஹுசைன் குறித்து ஐ.நா. பொதுச் செயலரிடம் முறைப்பாடு!

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல்-ஹுசைன் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அத்து மீறி நடந்து கொள்வதாக ஐ.நா. பொதுச் செயலாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. புலம்பெயர் பூகோள இலங்கையர் அமைப்பினால் ஐ.நா.பொதுச் செயலாளரிடம் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.





குறித்த அமைப்பின் சார்பில் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, அமைப்பின் செயலாளர் வசந்த கீர்த்திரன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வின் போது கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த சந்திப்பின் பின்னர் பூகோள இலங்கையர் சார்பில் கருத்து வெளியிட்டிருந்த பிரமுகர்கள், ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரிடம் குறித்த அறிக்கை கையளிக்கப்பட்டிருந்ததாக தெரிவித்துள்ளனர். அத்துடன் இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையத்தின் முன்மொழிவுகளை தாம் சவாலுக்கு உட்படுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# நியூயோர்க்கில் எதிர்பார்த்த சந்திப்புக்கள் கைகூடாமல் நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

எதிர்பார்த்தபடி முக்கிய சந்திப்புக்கள் கைகூடாமலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பியுள்ளார்.

ஐ.நா.பொதுச்சபையின் 72ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்க நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கொழும்பு திரும்பினார்.

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்கும் முக்கிய உலகத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விருப்பம் கொண்டிருந்தார்.

எனினும் கொழும்பில் இருந்து புறப்படும் முன்னர் உறுதிப்படுத்தப்பட்ட பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் பிரதமர்களுடனான சந்திப்புக்கள் மாத்திரம் இடம்பெற்றன.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மார்க்கல், ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே உள்ளிட்டவர்களைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி விருப்பம் கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்புக்கள் நடப்பதற்கு வாய்ப்புகள் இருப்பதாக, வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் கூறியிருந்தனர்.

எனினும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மார்க்கல், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் ஆகியோர் ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இந்தியா சார்பில் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜும், சீனா சார்பில் வெளிவிவகார அமைச்சர் வாங்யியும், ஜேர்மன் சார்பில் உதவி அதிபர் சிக்மர் கபிரியேலுமே கலந்து கொண்டனர். இதனால் இந்த நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டாமல் போனது.

ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே நியூயோர்க்கிற்கு வந்திருந்த போதும் இலங்கை ஜனாதிபதியைச் சந்திக்க அவர் நேரம் ஒதுக்கவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் வாய்ப்பும் ஜனாதிபதிக்கு கிடைக்கவில்லை.

எனினும், உலகத்தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி அளித்த வரவேற்பு உபசாரத்தின் போது, அமெரிக்க-இலங்கை ஜனாதிபதிகள் தமது துணையர்களுடன் இணைந்து ஒளிப்படம் எடுத்துக் கொண்டனர்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர்தோமஸ்சானொன் மாத்திரம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அதேவேளை, ஐ.நா. பொதுச்செயலர் மற்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஒத்துழைப்பை வலுப்படுத்த இலங்கை - பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் மட்ட பேச்சில் இணக்கம்



இருதரப்பு ஒத்துழைப்பை தொடர்ந்து வலுப்படுத்துவதற்கு இலங்கை-பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கு இடையில்நடத்தப்பட்ட 4 ஆவது அதிகாரிகள் மட்டப் பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கு இடையிலான 4 ஆவது அதிகாரிகள் மட்டப் பேச்சுக்கள் கடந்த 23 ஆம் திகதி பனாகொடவிலுள்ள இலங்கை இராணுவ சமிக்ஞைப் படைப் பிரிவு தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதில் மேஜர் ஜெனரல் ஹபீஸ் உர் ரஹ்மான் தலைமையிலான பாகிஸ்தான் இராணுவத்தின் 6 அதிகாரிகளும் இலங்கை இராணுவத்தின் சமிக்ஞைப் படைப் பிரிவின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அஜித் விஜேசிங்க, மேஜர்ஜெனரல்ரேணுகா ரோவெல், பிரிகேடியர் பிரபாத் தெமடன்பிட்டிய உள்ளிட்ட இலங்கை இராணுவ அதிகாரிகள் 15 பேர் கலந்து கொண்டனர்.

இந்தப்பேச்சுக்களின்போதே, இருதரப்பு இராணுவ ஒத்துழைப்புக்களை மேலும் வலுப்படுத்திக் கொள்வது என்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஹபீஸ் உர் ரஹ்மான் பாகிஸ்தான் இராணுவத்தின் பிரதான தலைமையகத்தில் கட்டுப்பாட்டு, தொலைத்தொடர்பு, கணனிகள் மற்றும் புலனாய்வுப் பணியகத்தின் கட்டளைப் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### தவறாகப் புரிந்து கொள்கிறவர்கள்

ஒரு தொழிலில் ஒரு பங்குதாரர் தன் சக பங்குதாரரிடம் நான் இதிலெல்லாம் ரொம்பவும் சரியாக நடந்துக்கிறவன் என்று பேச்சுவாக்கில் சொன்னார். உடனே அந்த மற்ற பங்குதாரர் அப்படீன்னா நான் இதிலெல்லாம் சரியாக நடத்துக்கலைன்னு மறைமுகமாகக் குத்திக் காண்பிக்கிறீங்க. அப்படித்தானே? என்று சண்டைக்கு வந்து விட்டார். அவ்வளவுதான்! அது பெரிய பனிப்போராக மாறி பிரிந்து விட்டார்கள்.

வீட்டிற்கு வந்த ஒரு வயதான உறவினரிடம் மெட்ராஸ்ஸ ரயில் டிக்கெட் நினைத்த மாத்திரத்தில் கிடைக்காது. எனவே முன்னதாகவே பயணத்தைப் பற்றி முடிவு பண்ணி வச்சுக்குங்க என்றேன். அவ்வளவுதான்! டஸ்புஸ் என்று வெடிக்க ஆரம்பிச்சுட்டார்.

என்னை உடனே புறப்படுன்னு மறைமுகமாகச் சொல்றே! அப்டித்தானே? என்றார். அப்படியில்லை, ரயில் கிடைக்காவிடில் பஸ்ஸில் பயணம் பண்ணனும். பஸ்ஸில் பயணம் பண்ணினால் உங்களுக்குக் கால் வீங்கிடும். உடல் அசதியாயிடும். அதுக்காகச் சொன்னேன். என்றான். அதையெல்லாம் அவர் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. தொடர்ந்து 'உர்' ஆனார்.

உடன் பணிபுரிகிறவர்களிலிருந்து உறவினர்களிலிருந்து மளிகைக்காரர், பால்காரர் வரை நாம் ஒன்றை புரிந்து கொள்ள, நல்லுறவே கெட்டுப் போகிறது. இவர்களிடமிருந்து தப்பிக்கவும், நற்பெயர் வாங்கவும் என்ன வழி?

முதலில் இரு பொருள் தொனிக்கும் எந்த ஒரு சொல்லையும் எந்த ஒரு கருத்தையும், நாம் வெளியிடக்கூடாது என்பதில் குறிப்பாக இருக்க வேண்டும்?

ஒன்றைச் சொல்லுமுன் எப்படிச் சொன்னால் நல்லது என்று சிலமுறை சிந்தித்து குறை காண முடியாத அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும். நல்லவிதமாகச் சொன்னாலும் தவறாக எடுத்துக் கொள்கிறவர்களும் இரண்டு ரகத்தினர் உண்டு. முதலாமவர்கள் 'மூடு அவுட்' ஆகிவிடும் நேரத்தில் மட்டும் இவர்களுக்கு எது சொன்னாலும் தவறாகப் படும். கோபம் வெளிப்படும். இவர்கள் மூடு எப்படி உள்ளது என்று நாடி பிடித்துப் பார்த்து நல்ல மூடில் இருந்தால் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் தள்ளிப் போட வேண்டும். இரண்டாவது ரகத்தினர் வாயைத் திறந்தாலே குற்றம் கண்டுபிடிக்கிறவர்கள்.

நம் வட்டத்தில் இப்படி எதற்கெடுத்தாலும் குறை கண்டுபிடிக்கிறவர்கள் யார்? யார்? என்பது நமக்குத் தெரியும் என்பதால் இவர்களிடம் மிகக் குறைவாகவே பேச வேண்டும். இவர்களிடம் சொல்ல விரும்பும் விடயத்தைப் பீடிகையுடன் ஆரம்பிக்க வேண்டும். சொன்னால் நீங்கள் தப்பாக எடுத்துக் கொள்வீர்களோ என்று தயக்கமாக இருந்தது. அதனால் விட்டுவிட்டேன் என்று தொடங்க வேண்டும். சும்மா சொல்லு; நான் தப்பாவே எடுத்துக்கமாட்டேன் என்கிற தங்க வாக்கியத்தை இவர்கள்வாயிலிருந்துவரவழைக்க வேண்டும்.

அதை வரவழைத்துவிட்டால் போதும் நமக்கு 75 சத விகித வெற்றி தான்.

அப்புறம் வார்த்தை கிளவுசுகளால் இவர்களைக் கும்மாங் குத்துக் குத்தலாம். தவறாகவே எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

லேனா தமிழ்வாணன்

## திலீபனின் நினைவாக இரத்ததானம்



தியாக திலீபனின் நினைவு தினத்தினை முன்னிட்டு யாழ்.மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் புத்தூர் சந்தி பொதுமண்டபத்தில் நடத்தப்பட்ட இரத்ததான முகாமில் பலர் கலந்துகொண்டனர்.

## வடமராட்சியிலும் அஞ்சலி



தியாக திலீபனுக்கு வடமராட்சியிலும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்திய அரசிடம் 5 அம்சக் கோரிக்கையினை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து தனது உயிரினைத் தியாகம் செய்த தியாக திலீபனின் 30 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு தாயகத்தில் நேற்று உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

வடமராட்சியில் கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் வடமாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் அஞ்சலி செலுத்தினார். தியாக திலீபனின் உருவப்படத்தினை வைத்து சுடர் ஏற்றி மலர் தூவி அவர் அஞ்சலி செலுத்தினார். (இ-60)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களில்

# 50 ஆயிரம் கல்வீடுகள் அமைக்க அரசால் கேள்வி கோரல் முன்னெடுப்பு

## நல்லிணக்க அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் 50 ஆயிரம் கல் வீடுகளை வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நிர்மாணிப்பதற்கான அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

30 வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இது ஒரு நீண்டகால நிறைவு செய்யப்படாத தேவையாகவும் முன்னுரிமையான நல்லிணக்க செயற்பாடாகவும் நோக்கப்பட்டது. இக்கருத்திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலின் தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்கத்திற்குமான அமைச்சினால் ஏனைய அமைச்சுக்களுடனும் நிறுவனங்களுடனும் இணைந்து அமுலாக்கபபடும்.

தேசிய ஒருங்கிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சினால் தயாரிக்கப்பட்ட இக்கருத்திட்டமானது வடக்கு- கிழக்கு மாகாண அபிவிருத்திக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது.



இத்திட்டத்தினை அமுலாக்குவதற்கான கேள்வி மனுக்கோரல்கள் தேசிய ஒருங்கிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சினால் ஏனைய அமைச்சுக்களையும் நிறுவனங்களையும் இணைத்து முன்னெடுக்கப்படுகின்றது. இதனடிப்படையில் 24.09.2017 ஞாயிற்றுக்கிழமை "Sunday Times", "Sunday Observer" ஆகிய பத்திரிகைகளில் கேள்வி கோரல்கள் விளம்பரப்படுத்தப்பட்டதுடன் எதிர்வரும் நாட்களில் ஏனைய ஆங்கில, சிங்கள, தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் எனவும் தேசிய ஒருங்கிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கேள்வி கோரல்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்கும் நிதியினைப் பெறுவதற்குமான கேள்வி கோரல்களாக அமையும்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் அரச அதிகாரிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் புத்திஜீவிகளும் இக்கருத்திட்டத்தினை வரவேற்றுள்ளதுடன் அப்பிரதேசங்களிலுள்ள சமூக, கலாசார விழுமியங்களுக்கும் காலநிலைக்கும் மிகவும் உகந்த திட்டமாகவும் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கக்கூடிய ஒரு செயற்றிட்டம் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இச்செயற்றிட்டம் நல்லிணக்க செயற்பாட்டின் ஒரு முக்கியமைல்கல்லாக நோக்கப்படுவதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். (இ-3)

# புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையில் அவசரகால சட்டம் குறித்து புதிய பரிந்துரை

(தொடர்ச்சி)

அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்பட்ட அலுவலரொருவரான பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் தேர்தல் நடத்தப்படும்.

10. பூரணமான வாக்கு முறைமை மூலம் தேர்தல் நடத்தப்படும். 50 சதவீதத்திற்கு மேலான அறுதிப் பெரும்பான்மையொன்றைக்கொண்ட வேட்பாளரொருவரைஈற்றில்பெற்றுக் கொள்வதற்காக இம் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இம்முறைமையின் கீழ், வேட்பாளர் எவரும் முதலாவது சுற்றில் அறுதிப் பெரும்பான்மையொன்றைப் பெற்றிருக்காவிட்டால் பின்னர் மிகக்குறைந்த எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் அகற்றப்படுவதுடன் மேலும் வாக்கெடுப்பிலிருந்து விலக்கப்படுவார். ஒரு வேட்பாளர் அறுதிப் பெரும்பான்மையொன்றை பெறும் வரையில் விலக்கற் செயன்முறை மற்றும் மீள் வாக்கெடுப்பு தொடரும்.

11. பின்வரும் நிலைமைகளில் தவிர்த்து பாராளுமன்றம் முதலாவது 4 1/2 ஆண்டுகளுக்குள் கலைக்கப்படக்கூடாது:

(அ) வாக்களிக்காதோர் உள்ளடங்கலாக உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்டதீர்மாணமொன்றினால் முன்கூட்டிய கலைப்பின்ன-சபை கோருதல்:

(ஆ) இரண்டு முயற்சிகளின் பின்னர் வருடாந்த ஒதுக்கீடுகள் (வரவு-செலவுத்திட்டம்) சட்டமூலத்திற்கு ஆதரவைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் இயலாதுள்ளமை.

12. பிரதம அமைச்சரொருவரும் அரசாங்கமும் பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டாலோ அல்லது முடிவற்ற பொதுத் தேர்தலொன்றின் பின்னர் சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டாலோ பின்வரும் நிலைமைகள் தவிர்த்து அதன் காலப்பகுதியின் முதல் இரண்டு வருடங்களின் போது பதவியிலிருந்து நீக்கப்படக்கூடாது:

(அ) வாக்களிக்காதோர் உள்ளடங்கலாக உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட வாக்கொன்றினால் அரசாங்கத்தில் நம்பிக்கையின்மையைக் கொண்டுள்ளதாக சபை வெளிப்படுத்தல்.

(ஆ)மூன்று முயற்சிகளின் பின்னர் வருடாந்த ஒதுக்கீடுகள் (வரவு-செலவுத்திட்டம்) சட்டமூலத்திற்கு ஆதரவைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் இயலாதுள்ளமை.

அத்தகைய சந்தர்ப்பத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட வேண்டும்.

13. பதவிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் பிரதம அமைச்சரின் மீதும் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்று சாதாரண பெரும்பான்மையால் சபையில் நிறைவேற்றப்பட்டால் பாராளுமன்றம் கலைக்கப்படல் வேண்டும்.

14. பதவிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் வருடாந்த ஒதுக்கீடுகள் (வரவு-செலவுத்திட்டம்) சட்டமூலம் இரண்டுதடவைகள் தோல்வியுற்றிருந்தால் பாராளுமன்றம் கலைக்கப்படல் வேண்டும்.

15. பிரதம அமைச்சர் சபையின் நம்பிக்கையைக் கொண்டிருக்கும் அதேவேளை பதவி துறப்பு, நோய் அல்லது வேறு காரணத்தால் பதவி விலகினால் பிரதம அமைச்சருக்கு அடுத்து வருபவரொருவர் பாராளுமன்றத்தின் விசேட அமர்வொன்றில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய தேர்தலுக்கு ஏற்புடையதாதல் வேண்டும். (மேலுள்ளவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்ட விதத்தில்)

### IX. அரசியலமைப்புப் பேரவை

1. குறித்துரைக்கப்பட்ட உயர் பதவித் தரங்களையுடைய பகிரங்க மற்றும் நீதி அலுவலர்களினதும் அதேபோன்று குறித்துரைக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களினதும் உறுப்பினர்களின் நியமனம் தொடர்பில் விதப்புரைகளை வழங்குவதற்காக அரசியலமைப்புப் பேரவையொன்று அரசியலமைப்புக்கான 19 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள அடிப்படைகளின்வழியாக தாபிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை வழிப்படுத்தும் குழு கொண்டுள்ளது.

2.ஆக்க அமைவு/ அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்களின் விகிதாசாரம் 3 பதவி வழி பாராளுமன்ற உறுப்பினர்கள்: 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாதோர் என்பதாக இருத்தல் வேண்டுமென ஆலோசிக்கப்பட்டது.

### X. பெண்களின் பிரதிநிதித்துவத்திற்காக

50% இற்கு நேர்ப் பெண்களின் பிரதிநிதித்துவக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் தேவையை கருத்திற்கொண்டு அனைத்து அரசியலமைப்பு சட்டமியற்றுதல் மற்றும் நியதிச் சட்டங்களின் விசேட ஏற்பாடுகளை உள்ளடக்க வேண்டியிருக்கும்.

### XI. பொதுமக்கள் பாதுகாப்பு

1. பொதுமக்கள் பாதுகாப்புக்கு பொது ஒழுங்கைப் பேணுவதற்கு (இயற்கைஅனர்த்தம்மற்றும்கொள்ளை நோயைத் தொடர்ந்தான பொது ஒழுங்கைப் பேணுதல் உட்பட) அல்லது சனசமூக மக்களின் வாழ்வுக்கு அவசியமான சேவைகளின் வழங்கல்களின் பேணுகைக்கு இருக்கும் தொழிலான அபாயத்தை கட்டுப்பாட்டில் கொண்டுவர நியாயமான காரணங்கள் இருக்கும் நிலைமையில் பிரதம அமைச்சரின் மதியுரையுடன் ஜனாதிபதி அவசர கால நிலையைப் பிரகடனம் செய்வார்.

அவசர காலநிலைமை எவ்வடிப்படையில் பிரகடனம் செய்யப்பட்டது என்பதை அந்த அவசரகால நிலைப் பிரகடனம்குறிக்கும்.

II. ஒரு மாகாணத்தின் ஆளுநர் முதலமைச்சரின்மதியுரையின்பேரில் அந்த மாகாணத்தினுள்ளே அவசரகால நிலைப்பிரகடனம் தேவைப்படும் நிலைமை எழுந்துள்ளது குறித்து பிரதம அமைச்சருக்கு மதியுரை அளிக்க முடியும்.

III. அவசரகால நிலைப்பிரகடனமானது பாராளுமன்ற அங்கீகாரத்திற்கும் நீதித்துறை மீளாய்வுக்கும் உட்பட்டிருக்கும்.

XXX. ஒரு மாகாண அரசாங்கம் குடியரசின் ஆட்புல எல்லைக்கும் அதன் இறைமைக்கும் தெளிவான ஆபத்தை ஏற்படுத்துகின்ற ஆயுதக் கலவரத்தை அல்லது கிளர்ச்சியை ஊக்குவிக்கின்ற அல்லது அரசியலமைப்பு மீதான ஒரு சர்வ தேச மீறலில் ஈடுபடுகின்ற நிலைமையொன்று தோன்றும் போது பிரதம அமைச்சரின் ஆலோசனையின் மீது ஜனாதிபதி பிரகடனம் மூலமாக

அ) மாகாண நிர்வாகத்தின் அனைத்து அல்லது ஏதேனும் பணிகளையோ மற்றும் ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் சபை அல்லது மாகாணத்தின் எந்த அல்லது அதிகாரி ஆகியவர்களுக்குரிய அதிகாரங்களை அல்லது அவர்களால் பிரயோகிக்கக்கூடிய அதிகாரங்களை ஜனாதிபதி பொறுப்பேற்கலாம்: மற்றும்

(ஆ) இந்த பந்தியின் உப்பந்தி (அ) இன் கீழான அதிகாரங்களின் பயனுறுதிமிக்க பிரயோகிப்புக்கு அவசியமாகும் பட்சத்தில் மாகாண சபையைக் கலைக்கலாம்.

(இ அந்தப் பிரகடனம் அத்தகைய பிரகடனத்தை செய்வதற்கான காரணங்களை உள்ளடக்க வேண்டும்.

அத்தகைய பிரகடனப்படுத்தலானது பாராளுமன்ற அங்கீகாரத்துக்கும் நீதிமன்ற மீளாய்வுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்.

# பொய் வாக்குறுதிகளே மகிந்தவின் தந்திரம்

## "Rajapakse the Sinhala Selfie" நூல் வெளியீட்டில் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரை

குசல் பெரேராவினால் எழுதப்பட்ட **'Rajapakse the Sinhala Selfie'** என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த 12ஆம் திகதி நடந்த இந்நிகழ்வில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிகழ்த்திய உரையின் மொழியாக்கம். (நேற்றைய தொடர்ச்சி...)



'ராஜபக்ஷ சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிரான் அலெஸ் தேர்தலைப் புறக்கணிப்பதற்கான முயற்சிகளுக்கு அனுசரணையாக இருந்ததாக ஐ.தே.க.உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பாக எமில் காந்தன் இதில் தொடர்புபட்டிருந்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு எமல் காந்தனுடன் ரிரான் அலெஸ் சமரசம் செய்தமையானது வேறுபட்ட அரசியல் நோக்கங்களைக் கொண்டிருந்திருக்கலாம் என நான் நம்புகிறேன்' என குசல் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

'தேர்தலைப் புறக்கணிப்பது தொடர்பில் பிரபாகரன் மற்றும் புலிகள் அமைப்பின் தலைமையுடன் எந்தவொரு உடன்படிக்கையையும் மேற்கொள்வதற்கான ஒரு மத்தியஸ்தராக பணியாற்றக்கூடிய தகைமையை எமில் காந்தன் கொண்டிருந்தார் என்பதை தனிப்பட்ட ரீதியாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அவ்வாறான ஒரு உடன்பாடு எட்டப்பட வேண்டிய தேவையிருந்திருந்தால் அதற்கு எமில் காந்தனைவிட மேலும் சிறப்பான கூடிய தகைமையைக் கொண்ட பலர் இருந்தனர். இவர்களுள் புலிகள் அமைப்பின் சமாதானச் செயலகத்தின் தலைவராகப் பணியாற்றிய புலித்தேவன் ஒருவராவார். ராஜபக்ஷ புலிகள் அமைப்புடன் ஏதாவதொரு உடன்பாட்டை மேற்கொள்ள விரும்பியிருந்திருந்தால் அரசியல் ரீதியான தொடர்பாடலைச் செய்வதற்கான நம்பிக்கை மிக்க மத்தியஸ்தராக புலித்தேவனைத் தெரிவுசெய்திருக்க முடியும்.

தேர்தலில் யாருக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் கொழும்பிலிருந்து பிரபாகரனுக்கு அனுப்பப்பட்ட பணத்தை பிரபாகரன் தனது அரசியல் இராணுவ எதிர்காலத்திற்காகக் சூதாடியிருப்பார் என்பதில் எனக்கு இன்னமும் சந்தேகம் உள்ளது' என குசல் பெரேரா எழுதியுள்ள நூலில் குறிப்பிட்டுள்ளார்.

'செப்டெம்பர் 11 தாக்குதலின் பின்னர் இடம்பெறும் பூகோள அரசியல் நிலைப்பாடுகளை புலம்பெயர் தமிழ் மக்கள் உன்னிப்பாக அவதானிப்பதற்கான திறனைக் கொண்டிராததால், வடக்கு- கிழக்கில் தமிழர்களுக்கான தனிநாடொன்றை உருவாக்குவதற்கு ஐ.நா.தலையீடு செய்வதற்கான அனைத்துலகப் பரப்புரை நடவடிக்கையை புலம்பெயர் தமிழ் மக்கள் ஆரம்பித்தனர். தாங்கள் இந்த நோக்கத்தை அடைவதற்கு இலங்கையின் ஜனாதிபதியாக கடும் போக்கு சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என அவர்கள் கருதினார்கள்.

இவ்வாறான ஒரு கடும்போக்கு சிங்கள ஜனாதிபதியால் மட்டுமே 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தவிர வேறெந்த ஒன்றுக்கும் உடன்பட முடியாது என புலம்பெயர் தமிழ் மக்கள் கருதினர். இதுவே தமிழீழ விடுதலைப் புலிகள் தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு காரணமாகியது. யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் அமுலில் இருப்பதை பெரும்பாலான தமிழ் மக்கள் விரும்பியதால் அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவிற்கே தமது வாக்குகளை வழங்குவார்கள் என தேர்தலுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் எதிர்வுகூறப்பட்டது' என குசல் பெரேரா தனது நூலில் எழுதியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சொந்த நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காகவே மகிந்த ராஜபக்ஷவைத் தெரிவு செய்திருக்கலாம். குசல், ராஜபக்ஷ குடும்பத்துடன் மிகவும் நெருக்கமானவர். மகிந்தவுடனும் இவர் மிகவும் நெருக்கமாகப் பழகியிருந்தார்.

13 நவம்பர் 2005இல் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் குசல் பெரேரா, மகிந்தவிற்கு திறந்த மடல் ஒன்றை எழுதியிருந்தார். அந்த மடலில் 'இந்த நாட்டின் தலைவிதியானது ஒரு சால்வையில் தொங்கும் நிலை ஏற்படுவதை நான் விரும்பவில்லை என்பதால் இத்தேர்தலில் நான் தங்களுக்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டேன்' என குசல் குறிப்பிட்டிருந்தார்.

'யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டதால் 'போர்க் கதாநாயகர்களின்' உதவியுடன் மகிந்த ராஜபக்ஷ ஊழல் மற்றும் அதிகாரத்துவ குடும்ப ஆட்சியை மேற்கொண்டிருந்தார். நான் இவரது இந்த ஆட்சியை 'திருட்டுத்தனமானது' என அழைக்க விரும்புகிறேன். அதாவது எமது நாட்டின் வளங்களை மகிந்த தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி திருடியுள்ளார் என்பதே இதன் கருத்தாகும்' என குசல் பெரேரா தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

குசல் பெரேராவின் நூலை நான் குறுகிய நேரத்தில் வாசித்துள்ளேன். இவரது நூலில் சில சாதகமான அம்சங்கள் காணப்படுகின்றன. சிங்கள மக்களின் ஆதரவை அதிகம் பெற்றிருந்த மகிந்த ராஜபக்ஷவை குசல் நன்கறிந்திருந்தார். ஆனால் மகிந்தவின் பிரபலமானது நாட்டில் வன்முறையை உருவாக்குவதற்கும் இலங்கையின் இன்றைய அரசியல் சூழலில் நிலவும் இன, மத முரண்பாடுகளை உருவாக்குவதற்கும் வழிவகுத்ததாக குசல் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

குசல் தனது நூலில் மகிந்தவின் முன்னைய வரலாறு மற்றும் சிங்கள தேசியவாத நீள்வட்டப்பாதையில் மகிந்தவின் உறிஞ்சல்கள் தொடர்பாகவும் இலங்கை சுதந்திரக் கட்சிக்குள் மகிந்த நுழைந்தமை தொடர்பாகவும் அதன் பின்னரான அவரது அரசியல் நகர்வுகள் தொடர்பாகவும் எழுதியுள்ளார். தமிழ் மக்களுக்கு எதிராக மகிந்தவால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு திட்டமிட்ட நகர்வுகள் குறிப்பாக தமிழ் மாணவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கல்வித் தரப்படுத்தல் தொடர்பாகவும் குசல் குறிப்பிட்டுள்ளார்.

'சிங்கள பௌத்த நாட்டின் ஒருங்கிணைப்பானது கடந்த முப்பதாண்டுகளில் பல்வேறு சிக்கலான அரசியல் கையாளல்கள் மூலம் பெறப்பட்டது. இவ்வாறான ஒவ்வொரு தலையீடும் சிங்கள சமூகத்தின் மனங்களை பலப்படுத்தியுள்ளது. இதன்மூலம் இரு பெரும் சிங்கள அரசியற் கட்சிகள் தேர்தலில் முதன்மை பெற்றுள்ளன. இவ்விரு கட்சிகளின் மூலம் ஒவ்வொரு தேர்தலிலும் சிங்கள வாக்குகள் அரசியல் அதிகாரத்தைப் பெறக் காரணமாக உள்ளன. இதுவே தமிழ் மக்களின் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமைக்கான முதன்மைக் காரணமாகும்' என குசல் தனது நூலில் எழுதியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதென்பது உண்மையில் சாதாரணமானதாகும். இந்த மக்களின் அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட்டு இவர்களுக்கான அரசியல் உரிமைகள் ஏற்கப்படும் பட்சத்தில் இந்த நாட்டில் அமைதி, நல்லிணக்கம், பொருளாதார மீளுருவாக்கம் போன்றன உடனடியாக இடம்பெறும். இதன்மூலம் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

கலாநிதி கொல்வின் ஆர்.டீ. சில்வாவின் நினைவு நாள் இடம்பெற்ற 01.03.2008 அன்று கொழும்பு றோயல் கல்லூரியில் என்னுடன் கற்ற எனது சகபாடியும் எனது நண்பனுமான கலாநிதி நிகால் ஜெயவிக்கிரம ஆற்றிய உரை தொடர்பாகவும் குசல் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அதாவது 1972 மற்றும் 1978 அரசியல் சாசனங்கள் தொடர்பாகவே இந்த உரை அமைந்திருந்தது. அப்போதைய அரசியல் கட்சிகள் தமது அரசியல் நலன்களுக்காகவே அரசியல் சாசனங்களை உருவாக்கியதாகவும் மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப அரசியல் சாசனங்களை உருவாக்கவில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலாநிதி கொல்வின் ஆர்.டீ. சில்வா மற்றும் லங்கா சம சமாஜக் கட்சி ஆகியன பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருந்தன. இதன் பின்னர் 1970 தேர்தலில் இப் பெரும்பான்மையை ஐக்கிய முன்னணி பெற்றுக் கொண்டது. இதன் மூலம் கலாநிதி ஆர். டீ.சில்வா தன்னும் தனது கட்சியின் நீண்ட நாள் அரசியல் நம்பிக்கைகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பாக அரசியல் சாசன வரைவை எடுத்துக் கொண்டார். இது தொடர்பில் எந்தவொரு தரப்பிடமிருந்தும் குறிப்பாக பொதுச் சேவை, நீதி மற்றும் மிதவாதக் கருத்தைக் கொண்டிருந்த அப்போதைய பிரதமரிடமிருந்தும் தடை ஏற்படக் கூடாது என இவர் விரும்பினார். இதனால் வடக்கில் வாழ்ந்த மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவதற்கு இந்த சாசனம் தவறிவிட்டது என்பது பெரும் துன்பியல் சம்பவமாகும்' என குசல் குறிப்பிட்டுள்ளார்.

1978 அரசியல் சாசனத்தை வரைவதற்கு கலாநிதி எச்.டபிள்யூ. ஜெயவர்த்தன பொறுப்பாக இருந்தார்.

(தொடரும்...)




யாழ்.அத்தியார் இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# மகிந்தவின் உறவினரை தாக்கிய 15 பேர் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறவினர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்த 15 பேரையும் ராமேஸ்வரம் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறவினரான நடேசன் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதியன்று பூஜை செய்வதற்காக ராமேஸ்வரம் சென்றிருந்தார்.

ராமேஸ்வரம் பகுதியிலுள்ள பூசகர் ஒருவரின் வீட்டில் பூஜை செய்து விட்டு வெளியே வந்தபோது நடேசனை சிலர் தாக்கி அவர் மீது காலணிகளை வீசினர்.

இதனையடுத்து ராமேஸ்வரம் பொலிஸார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த 15 பேரை கைது செய்தனர். ராமேஸ்வரம் குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்த இந்த வழக்கில் 15 பேரையும் விடுதலை செய்யுமாறு நீதிபதி பிரபாகரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார். (இ-7)

# ஐ.நா. அமர்வில் வைகோவை சூழ்ந்து சிங்களவர்கள் கோஷம்

## மு.க.ஸ்டாலின் கண்டனம்



ஈழத்தமிழர்களுக்கு எதிரான சிங்கள அரசின் இனப்படுகொலை பற்றி ஐ.நா.மனித உரிமைகள் அமர்வில் பேசிய வைகோவை சிங்களர்கள் சிலர் சூழ்ந்து கொண்டு தாக்க முயன்றதற்கு தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் அமர்வில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இனப்படுகொலை அரசிற்கு எதிராகப் பேசிய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவை சிங்களர்கள் சிலர் சூழ்ந்து கொண்டு தாக்க முயன்றதற்கு தி.மு.க. சார்பில் எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனித உரிமைக்கவுன்சிலுக்கு உள்ளேயே இந்தியாவில் இருந்து சென்ற ஒரு தமிழரின் மனித உரிமைக்கு எதிராக சிங்களவர்கள் சிலர் இப்படிப்பட்ட செயலில் ஈடுபட்டிருப்பது கவலையளிக்கிறது. இதுகுறித்து மத்திய அரசு உடனடியாக தனது கண்டனத்தைப் பதிவு செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரணிலிடமிருந்து அதிகாரத்தை மைத்திரி பறிக்க வேண்டும்

## சு.க.அமைச்சர் டிலான் வலியுறுத்து



"கொழும்பு மாவட்ட மக்களின் வாக்குகளை மாத்திரம் பெற்ற ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து நாட்டை நிர்வகிக்கும் அதிகாரத்தைப் பறிக்க இனியாவது முழு நாட்டு மக்களின் வாக்குகளைப் பெற்ற அரச தலைவர் மைத்திரி நாட்டை நிர்வகிக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"கூட்டு அரசை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுகின்றது. நாம் ஐக்கிய தேசிய கட்சியை விமர்சிக்கும்போது ஏன் ஓர் அரசுக்குள் இருந்துகொண்டு எம்மை விமர்சிக்கின்றீர்கள் என்று அவர்கள் கேட்கின்றார்கள்.

ஆனால், உண்மையில் அவர்கள்தான் அவர்களை விமர்சித்துக் கொள்கின்றனர். சரத் பொன்சேகா, விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் ராஜித சேனாரட்ன ஆகியோரை நாம் விமர்சிக்கவில்லை.

அவர்களே அவர்களை விமர்சித்துக் கொள்கின்றனர். இதனால் அவர்கள்தான் கூட்டு ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்கின்றனர். கூட்டு அரசின் தலைமைத்துவத்தை மக்கள் மைத்திரிக்கே வழங்கியுள்ளனர் ரணிலுக்கு அல்ல.

அதனால்தான் கொழும்பு மாவட்ட மக்களின் வாக்குகளை மாத்திரம் பெற்ற ரணில் விக்கிரமசிங்கவிடம் நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைக்காமல் முழுநாட்டு மக்களின் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி மைத்திரியே நாட்டை நிர்வகிக்க வேண்டும் என்று நாம் அடிக்கடி கூறி வருகின்றோம்.

கடந்த மாதம் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார். ரவி கருணாநாயக்கவின் அமைச்சை மாற்றி அவர் பதவி விலகும்வரை சில அதிரடியான முடிவுகளை எடுத்தார்.

இவ்வாறு ஜனாதிபதி தொடர்ந்து செயற்பட வேண்டும். இனியாவது ரணிலைத் தவிர்த்து அவரே நாட்டை ஆட்சி செய்ய வேண்டும். அவருக்கு மக்கள் வழங்கிய ஆணையை அவர் பயன்படுத்த வேண்டும்.

மைத்திரிபாலவின் பரந்த மனப்பான்மை காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு தலைமை அமைச்சர் பதவி கிடைத்துள்ளது என்பதை அந்தக் கட்சி உறுப்பினர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

மைத்திரியின் நெகிழ்வுத்தன்மையை இவர்கள் பிழையாக பயன்படுத்தக் கூடாது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பர்தா அணிந்த இளைஞன் கைது!

கண்கள் மட்டும் தெரியும் வகையிலான முகத்தினை மூடிய பர்தா உடையணிந்து பேருந்தில் ஏறிய இளைஞனொருவனை பதுளைப் பொலிஸார் நேற்று முற்பகல் கைது செய்துள்ளனர்.

தெமோதரையைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய எஸ். ஏ. ஜயவர்த்தன என்ற இளைஞரே பர்தா உடையணிந்திருந்த நிலையில் பதுளைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவராவார். இவ் இளைஞன் இஸ்லாமியப் பெண் போன்று பதுளை பேருந்து நிலையத்திலிருந்து பசறை செல்லும் இ.போ.ச.பேருந்தில் ஏறியபோது இவர் குறித்து சந்தேகம் கொண்ட பயணிகள் சிலர் ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கவே பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்தனர்.

மோசடியொன்றில் ஈடுபடும் பொருட்டே இவ் இளைஞன் பேருந்தில் பயணிக்க முற்பட்டிருக்கலாமென்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். பதுளைப் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)


# மரண அறிவித்தல்

## திருமதி நடராஜா பொன்னம்மா



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா - பொன்னம்மா (25.09.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூரியர் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அரிய குட்டி-அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும் ஞானேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சண்முகராஜா மற்றும் றஞ்சினிதேவி (ஜேர்மனி), செல்வராசா (ஜேர்மனி), இராமச்சந்திரன் (டென்மார்க்), சகுந்தலாதேவி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கந்தசாமி, பேபி, நந்தீஸ்வரன், எல்சி, குணபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.09.2017 வெள்ளிக்கிழமை kirkegardskapellet, Heden 3-55000 odense C, Denmark இல் 9 மணிக்கு நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமச்சந்திரன்
+4526366568 (டென்மார்க்)
சகுந்தலாதேவி
+4523497602 (டென்மார்க்).

தகவல்:
க.கந்தசாமி
(மருமகன் காவேரி மில்)
021-223 0480
புலவனார் வீதி, கல்வியங்காடு.

(803)

# இந்தியப்படை அதிகாரிகளின் உயர்மட்டக்குழு இலங்கையில்

## அமைதிப்படையினருக்கு அஞ்சலி செலுத்தினர்



(கொழும்பு)

இந்திய இராணுவ உயர் கட்டளை கற்கைநெறி அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம்மேற்கொண்டுள்ளது. எயார் கொமடோர் சுரேஷ் ஹொல்லன்னாவர் தலைமையிலான இந்தக் குழுவில் இந்தியாவின் முப்படை அதிகாரிகளும் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

அத்துடன் இலங்கை விமானப்படை, கடற்படைத் தளபதிகளையும் இந்திய அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தியப்படை அதிகாரிகள் பத்தரமுல்லையிலுள்ள இந்திய அமைதிப்படையினருக்கான நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தினர்.

இருதரப்பு இராணுவ ஒத்துழைப்பு மற்றும் பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக இந்தியப்படை அதிகாரிகள் குழு கொழும்பு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மணப் பெண்ணின் சேலையால் மாட்டினார் செயலாளர்

## முதலமைச்சரை விடுவித்தார் ஆளுநர்



(கொழும்பு)

திருமண வைபவமொன்றில் மணப்பெண் அணிந்திருந்த சுமார் 3.8 கிலோமீற்றர் நீளமான சேலையை பாடசாலை மாணவர்கள் ஏந்தியிருந்த விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவை, அக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிப்பதாக, மத்திய மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்க அறிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கூட்டத்திலேயே அவர் மேற்கண்ட அறிவிப்பை விடுத்தார். பாடசாலை மாணவர்களை அந்த செயற்பாட்டில் ஈடுபடுத்தியமைக்கான பொறுப்பை மத்திய மாகாண கல்விச் செயலாளரே ஏற்க வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கண்டி- கண்ணொரு வரையில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற திருமண வைபவமொன்றில் மணப்பெண் அணிந்திருந்த சுமார் 3.8 கிலோமீற்றர் நீளமான சேலையை பாடசாலை மாணவர்கள் 250 பேர் ஏந்தியிருந்தனர். சேலையை ஏந்துவதற்கு பாடசாலை மாணவர்களை சீருடையில் பாடசாலை நாளொன்றில் பயன்படுத்தியமையால் இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்த விவகாரம் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் கல்வியமைச்சு ஆகியனவும் விசாரணைகளுக்கு ஏற்கெனவே பணித்திருந்தன. மத்திய மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்கவும் விசாரணைக்குப் பணித்திருந்தார்.

கின்னஸ் சாதனையை படைப்பதற்காகவே மணமகளுக்கு இவ்வளவு நீளமான சேலை அணிவிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. (இ-7)

# வாழைக்குலை திருடனை நாய் கடித்துக் குதறியது

(கொழும்பு)

திருகோணமலை வான்-எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதியில் வாழைக்குலைகளைத் திருட முயற்சித்த ஒருவரை நாய் கடித்துக் குதறியதில் பலத்த காயங்களுடன் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

வான்-எல ஆயிலியடி பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவரே நாய்க்கடிக்கு உள்ளாகியுள்ளார். குறித்த நபர் கடந்த 24ஆம் திகதி வாழைத் தோட்டமொன்றில் வாழைக் குலைகளைத் திருடுவதற்கு முயன்ற வேளையில் நாய் கடித்துக்குதறியதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பாதுகாப்பு பிரதிநிதிகள் சந்திப்பு



இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள இந்திய இராணுவ தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பிரதிநிதி எயார் கொமாண்டர் சுரேஷ் ஹொலன்னாவர் உள்ளிட்ட குழுவினர் கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல் ட்ரவிஸ் சின்னையாவை நேற்று முன்தினம் கடற்படை தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். (இ-7)

# வேலை செய்ய முடியாது; துஷித இராஜினாமா!

(கொழும்பு)

கொழும்பு கொமர்ஷல் பசளை நிறுவனத்தின் தலைவர் துஷித தன்னுடைய பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தன்னுடைய இராஜினாமாக் கடிதத்தை நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ளார்.

விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் கீழுள்ள நிறுவனங்களில் தொடர்ந்து பணியாற்ற முடியாது என்பதனால் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அவர் அறிவித்துள்ளார். (இ-7)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1202

Search for people, places and things — Nagendram Home

### சனா





### திவ்யா




### சதுரன்




### கவிதன்




### நிவோயா




### சிந்து




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடமாகாணத்தின் உள்ளூராட்சிக் கட்டமைப்பு-2017

இவ் வட்டாரத்துக்குரிய குடித்தொகை நானாட்டான் பிரதேச சபை குடித் தொகையுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

இதுபோல மடு பிரதேச் செயலகத்தைச் சேர்ந்த 7 கிராம அதிகாரிகள் பிரிவுகள், இரு வட்டாரங்களாக ஈரணை இலுப்பைக்குளம், காக்கையன் குளமாக மாந்தை மேற்குப் பிரதேச சபைக்குள் வருகின்றது. இந்த 7 கிராம அதிகாரி பிரிவுக்குரிய மக்கள் தொகை மாந்தை பிரதேச சபையுடன் சேர்க்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை பிரதேச சபை வடமராட்சி பிரதேச செயலகப் பிரிவுள் இருக்கும் நகர்ப் பகுதிகளுக்குள் வரும் குடித்தொகை நீங்கலாகவும் வடமராட்சி கிழக்குப் பிரிவின் குடித்தொகையையும் சேர்த்து காட்டப்பட்டுள்ளது. இதுபோல நல்லூர் பிரதேச செயலக பிரிவில் வரும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுப் பகுதிகள் நீங்கலான குடித்தொகையே நல்லூர் பிரதேச சபையின் குடித்தொகையாகும்.

தேசிய உள்ளூராட்சி வட்டார நிர்ணய குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்த உள்ளூராட்சி வட்டார மீள் நிர்ணயக் குழு வட்டாரங்களில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. தற்பொழுது வட்டார மீள் நிர்ணயக்குழுவின் சிபாரிசுகள் சிலவற்றை மேலும் ஒரு வட்டார மீள் மீள் நிர்ணயக்குழு பரிசீலனை செய்கின்றது. இதனால் தேசிய ரீதியில் வட்டார எல்லைகளில், பெயர்களில் ஒருசில மாற்றங்கள் வரக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. வடமாகாணத்திலும் சில வட்டாரங்களில், பெயர்களில் ஒரு சில மாற்றங்கள் ஏற்படலாம்.

பிரதேச சபைகள் அமைப்புக்கு முன்னிருந்த பட்டண சபைகள், கிராம சபைகள், குறித்த பிரதேசத்துக்கு கூடிய சந்தர்ப்பத்தையும், கௌரவத்தையும், தனித்துவத்தையும் கொடுத்தன. பட்டண சபைகள், கிராம சபைகள் ஒழிக்கப்பட்டது மிகவும் துன்பகரமான நிகழ்வு.

வடமாகாணத்தில் இருந்த சங்கானை, சுன்னாகம், காங்கேசன்துறை, நெல்லியடி, ஊர்காவற்றுறை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, உரும்பிராய்-ஊரெழு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பட்டண சபைகள் ஒழிக்கப்பட்டு பிரதேச சபைகளின் பகுதிகளாக மாற்றப்பட்டன. மன்னார் பட்டண சபை பின்னர் கடும் முயற்சி எடுத்து நகரசபை அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

வட மாகாணத்தில் 1960 களில் பல நகர சபைகள், பட்டண சபைகள் அமைக்கப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் அன்று உள்ளூராட்சி அமைச்சராக இருந்த எம்.திருச்செல்வம் ஆவார்.

பிரதமர் டட்லி சேனநாயக்கவின் தேசிய அரசாங்கத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற பிரதிநிதிகள் அமைச்சுப் பதவியை ஏற்பதில்லை என்ற தமிழரசுக் கட்சி நிலையிலும் உள்ளூராட்சி அமைச்சைப் பெறவேண்டும் என்ற உந்துதலால் செனட்டராய் இருந்த திருச்செல்வத்தை உள்ளூராட்சி அமைச்சுப் பதவியை ஏற்க வைத்தனர்.

அவர் பதவி வகித்த 1965-1968 இற்கு இடைப்பட்ட காலத்தில் தமிழ் பிரதேசங்களில் உள்ளூராட்சி சபைகளை உருவாக்குவதிலும் தரம் உயர்த்துவதிலும் சபைகளுக்கு புதிதாக வட்டார நிர்ணயம் செய்வதிலும் பெரும் பங்கு வகித்தார்.

மேலும் உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்துவதிலும் இச்சபைகளின் கீழ் செயற்பட்ட சந்தைகள் மற்றும் நிறுவனங்களை மேம்படுத்துவதில் மிகவும் கரிசனையாக செயற்பட்டார்.

உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் நிலையை உருவாக்கலாம் என்ற நிலைப்பாட்டை அமைச்சர் திருச்செல்வம் கொண்டிருந்தார். இவருக்குப் பின்னர் இன்று வரையும் மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சராக ஒரு தமிழரும் பதவி வகிக்கவில்லை என்பது மிகவும் கவலை தரும் விடயமாகும்.

இவ்வமைச்சு தமிழர் ஒருவருக்கு கிடைத்திருக்குமானால் அல்லது இவ்வமைச்சின் உயர் அதிகாரிகளில் ஒருசிலராவது தமிழராக இருந்திருப்பின் தமிழ்ப் பிரதேச உள்ளூராட்சி சபைகளின் வளர்ச்சிக்கு உதவியிருக்கலாம்.

வட மாகாணத்தில் முன்னர் இருந்த பட்டணசபைகளும், கிராம சபைகளும் உப காரியாலயங்களாக இன்றும் செயற்படுவது மகிழ்ச்சியாக இருக்கின்றது. கால ஓட்டத்தில் இவைகளுள் சில நகரசபை அந்தஸ்தைப் பெறலாம். வட மாகாணத்தின் பிரதேச சபைகளும், இவைகளின் கீழ் உள்ள உப காரியாலயங்கள் (முன்னாள் பட்டண சபை/கிராமச்சபை) பின் வருமாறு;

♦நெடுந்தீவு பிரதேச சபை -
நெடுந்தீவு கிராமச்சபை

♦வேலணைப் பிரதேச சபை-
1. நயினாதீவு கிராமச்சபை
2. புங்குடுதீவு கிராமச்சபை
3. வேலணை கிராமச்சபை
4. அல்லைப்பிட்டி கிராமச்சபை
5. மண்டைதீவு கிராமச்சபை

♦ஊர்காவற்றுறை பிரதேச சபை-
1. ஊர்காவற்றுறை பட்டணசபை
2. நாரந்தனை கிராமச்சபை
3. அனலைதீவு கிராமச்சபை
4. எழுவைதீவு கிராமச்சபை

♦காரைநகர் பிரதேச சபை-
1. காரைநகர் வடக்கு கிராமச்சபை
2. காரைநகர் தெற்கு கிராமச்சபை

♦வலிகாமம் மேற்கு பிரதேச சபை-
1. சங்கானை பட்டண சபை
2. வட்டுக்கோட்டை கிராமச்சபை
3. அராலி கிராமச்சபை
4. சுழிபுரம் கிராமச்சபை

♦வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை-
1. மானிப்பாய் பட்டணசபை
2. பண்டத்தரிப்பு பட்டணசபை
3. மானிப்பாய் கிராமச்சபை
4. பண்டத்தரிப்பு கிராமச்சபை

♦வலிகாமம் தெற்கு பிரதேச சபை-
1. சுன்னாகம் பட்டணசபை
2. ஏழாலை கிராமச்சபை
3. மல்லாகம் கிராமச்சபை
4. உடுவில் கிராமச்சபை

♦வலிகாமம் வடக்குப் பிரதேச சபை
1. காங்கேசன்துறை பட்டணசபை
2.தெல்லிப்பழை கிராமச்சபை
3.அளவெட்டி கிராமச்சபை
4.மயிலிட்டி கிராமச்சபை

♦வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
1. உரும்பிராய்-ஊரெழு பட்டண சபை
2.கோப்பாய் கிராமச்சபை
3.நீர்வேலி கிராமச்சபை
4.அச்சுவேலி கிராமச்சபை

♦வடமராட்சி தெற்கும் மேற்கும் பிரதேசசபை-
1. நெல்லியடி பட்டணசபை
2.கட்டைவேலி கிராமச்சபை
3.உடுப்பிட்டி கிராமச்சபை

♦பருத்தித்துறை பிரதேச சபை
1.புலோலி கிராமச்சபை
2.குடத்தனை கிராமச்சபை
3.செம்பியன்பற்று கிராமச்சபை
4.முள்ளிப்பற்று கிராமச்சபை (பகுதி)

♦சாவகச்சேரி பிரதேசசபை-
1. நாவற்குழி கிராமச்சபை
2. மட்டுவில் கிராமச்சபை
3. வரணி கிராமச்சபை
4. கச்சாய் கிராமச்சபை
5. மிருசுவில் கிராமச்சபை

♦பளைப் பிரதேச சபை-
1. முகமாலை பிரதேச சபை
2. புளோப்பளை பிரதேச சபை
3. முள்ளிப்பற்று பிரதேச சபை

♦கரைச்சிப் பிரதேச சபை-
1. கிளிநொச்சி பட்டணசபை
2. கரைச்சி கிராமச்சபை

♦பூநகரிப் பிரதேசசபை-
1. பூநகரி கிராமசபை
2. பல்லவராயன் கட்டு கிராமச் சபை

♦மன்னார் பிரதேச சபை -
1. மன்னார் கிழக்கு கிராமச்சபை
2. எருக்கலம்பிட்டி கிராமச்சபை
3. பேசாலை கிராமச்சபை
4. தலைமன்னார் கிராமச்சபை
5. மாந்தை மேற்கு கிராமச்சபை
6. மாந்தை தெற்கு கிராமச்சபை


♦மாந்தை மேற்குப் பிரதேச சபை-
1. இலுப்பைக் கடவை கிராமச் சபை
2.பெருங்காலியாற்று கிராமச் சபை
3. மாந்தை தெற்கு கிராமச்சபை
4. மேற்கு மூலை கிராமச்சபை

♦நானாட்டான் பிரதேச சபை-
1. வங்காலை கிராமச்சபை
2.நானாட்டன் மேற்கு கிராமச்சபை
3. நானாட்டன் கிழக்கு கிராமச்சபை

♦முசலி பிரதேச சபை-
முசலி வடக்கு கிராமச்சபை
முசலி தெற்கு கிராமச்சபை

♦வவுனியா வடக்கு பிரதேச சபை
உடையாவூர் கிராமச்சபை
மேல்பற்று தெற்கு கிராமச்சபை
மேல்பற்று கிழக்கு கிராமச்சபை

♦ வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபை
கிழக்கு மூலை தெற்கு சிங்கள கிராமச்சபை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

சின்னாச்செட்டிகுளம் (சிங்களம்) கிராமச்சபை

♦வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
கிழக்கு மூலை வடக்கு கிராமச் சபை
நடுச்செட்டிகுளம்
மேற்கு மூலை பிரதேச சபை

♦வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை
சின்னாச்செட்டிகுளம் மேற்கு கிராமச்சபை
சின்னாச்செட்டி கிழக்கு கிராமச் சபை

♦துணுக்காய் பிரதேச சபை
துணுக்காய் கிராமச்சபை

♦மாந்தை கிழக்கு பிரதேச சபை -
பனங்காமம் கிராமச்சபை

♦புதுக்குடியிருப்பு பிரதேச சபை-
புதுக்குடியிருப்பு கிராமச்சபை
கருநாவல்பற்று கிராமச்சபை
மேல்பற்று வடக்கு கிராமச்சபை

♦கரைதுறைப்பற்று பிரதேசசபை
முல்லைத்தீவு பட்டணசபை
கிழக்கு மூலை வடக்கு கிராமச் சபை
முள்ளியவளை கிராமச்சபை
கிழக்கு மூலை மேற்கு கிராமச் சபை
கிழக்கு மூலை தெற்கு கிராமச் சபை

பிரதேச சபைகளும், இச்சபைகளின் உப காரியாலயங்களாகச் செயற்படும் முன்னைய பட்டண சபை, கிராமச்சபைகள் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டால் வட பகுதியில் அபிவிருத்தியில் குறிப்பாக கிராம அபிவிருத்தியில் அடிமட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களின் மேம்பாட்டில் மேலும் பின்தங்கிய சமூகங்களின் வளர்ச்சியில் பெண்களை வலுவூட்டுவதிலும் பெரும் பங்கு வகிக்க முடியும். எல்லா மக்களின் அடிப்படை தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்வதில் உள்ளூராட்சி மன்றங்கள் பெரும் பங்காற்ற முடியும்.

வடக்கு மாகாணத்தில் இருக்கும் 34 உள்ளூராட்சி சபைகளுக்கு வரப்போகும் 724 அங்கத்தவர்கள் வடமாகாணத்தின் அடிமட்ட அபிவிருத்தியில் பெரும் பங்காற்ற முடியும். இதற்கு சரியானவர்களை தெரிவு செய்வது மக்களின் ஜனநாயக கடமையாகும். இதனை மக்கள் சரியாக செய்வார்கள் என்ற நம்பிக்கையுண்டு.




# லக்ஷ்மி கடாட்சம்

கண் விழித்த மன்னன் அந்த கிழவனின் தலையை வெட்டினால் என்ன என்று நினைத்து ஆத்திரம் கொண்டார். அதற்குள் பள்ளியறை கட்டிடம் இடிந்து விழுந்தது. அதை பார்த்த அரசனுக்கு மாமுனிவர் மேல் அளவிடாத பாசம் வந்தது.

"முனிவரே! நீர் இல்லாவிட்டால் நாங்கள் இருவரும் இறந்திருப போம்!"" என்றான்.

இந்த விஷயத்தை அறிந்த நாட்டு மக்கள், முனிவரை தெய்வ மாகவே பாவித்தனர்.

ஒரு நாள் அரசன் தன்னுடைய முக்கிய பரிவாரங்களுடன் காட்டுக்கு வேட்டையாட சென்றான். ஒரு மானை துரத்தி கொண்டு ஓடினார் மன்னன். அவன் பின்னாலே சென்றார் முனிவர்.

மான் தப்பிவிட்டது. களைத்து போன மன்னனும், முனிவரும் ஒரு மரத்தடியில் அமர்ந்தனர். முனிவரது மடியில் சற்று நேரம் இளைப்பாறவிரும்பினார்மன்னர் முனிவரும் சம்மதித்தார். அப்பொழுது மேலே பார்த்தார் முனி வர். அந்த மரத்தின் கிளை மேல் கருடன் ஒன்று பெரிய நாகத்தை தூக்கி வந்து தின்பதற்காக உட்கார்ந்திருந்தது. அந்த மரத்தின் கிளை அரசனுடைய மூக்குக்கு நேராக இருந்தது.

மாமுனிவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எழுந்து கருடனை விரட்டினால் மன்னனது தூக்கம் கெட்டுவிடும். நாகத்தினால் அரசனுக்கு தீங்கில்லை என நினைத்து விட்டுவிட்டார். கருடன் பாம்பை கொத்தியது. பாம்பு தன் விஷத்தை கக்கவே அது மன்னனின் கழுத்தில் வந்து விழுந்தது.

கால சர்பத்தின் விஷம் என்ன பண்ணுமோ என பயந்த முனிவர், தன் கத்தியால் அதை வழிக்க நினைத்தார். அப்பொழுது லட்சுமி, "நான் தாங்கள் விட்டு போக வேண்டிய நேரம் வந்துவிட்டது செல்கிறேன்,"என்று சொல்லிவிட்டு மறைந்து விட்டாள்.

கத்தியை எடுத்து அரசரின் கழுத்தில் வைத்தார் முனிவர். உடனே கண் விழித்தான் அரசன், "இப்படிப்பட்ட பாதக செயலை நீங்கள் செய்வீர்கள் என்று நான் சிறிதும் நினைக் கவில்லை," என்று கோபப் பட்டான்.



முனிவரோ, "மன்னா நான் உன்னை கொல்ல வேண்டு மென்றால் எப்பொழுதோ் கொன்றிருக்கலாம். சற்று தலையை தூக்கிப் பாருங்கள். கருடன் வாயிலிருக்கும் பாம்பின் வாயிலிருந்து ஒரு துளி விஷம் உங்கள் கழுத்தில் விழுந்துவிட்டது. அதை எடுக்கவே இப்படி செய்தேன். இனி நான் உங்களுடன் இருக்க மாட்டேன். லட்சுமி கடாட்சம் என்னை விட்டு போய் விட்டது,"என்றார்.

மன்னன் மிக வும் மன்னிப்பு கேட்டான். தாங்கள் என்னை விட்டு செல்லக்கூடாது என கூறினான். நடந்தவைகளை எல்லாம் கூறிய முனிவர், "எனக்கு என்ன இருக்கிறது. நான் ஒரு முனிவர். லட்சுமி என்னுடன் இருந்தவரையில் எனக்கு ஆபத்து இல்லை. இனி நான் தங்களுடன் இருப்பதில் பயனில்லை. விடை கொடுங்கள் நான் காட்டிற்கு செல்கிறேன்," என்றார்.

மன்னன் எவ்வளவோ கெஞ்சியும் முனிவர் அவருடன் இருக்க சம்மதிக்கவில்லை, தன்னை விட்டு லட்சுமி போன பிறகு மன்னனுடன் இருப்பது தனக்கு மிகுந்த ஆபத்தை தரும் என்பதை உணர்ந்து அரசனிடம் விடைபெற்று காட்டிற்கு சென்றார் முனிவர்.

தொடரும்.....




- 1066 - இங்கிலாந்தின் முதலாம் வில்லியமும் அவனது படையினரும் சோம் ஆற்றின் வாயிலில் இருந்து புறப்பட்டனர். நோர் மானியர் இங்கிலாந்தைக் கைப்பற்றுதல் ஆரம்பமானது.
- 1529 -முதலாம் சுலைமான் வியென்னா நகரை முற்றுகையிட்டான்.
- 1540 - இயேசு சபைக்கு திருத்தந்தை மூன்றாம் பவுல் ஒப்புதல் தந்தார்.
- 1590 - ஏழாம் ஏர்பன் திருத்தந்தை பதவியேற்ற 13 நாள் இறந்தார். இவரே மிகக்குறுகிய காலம் திருத்தந்தையாக இருந்தவர்.
- 1777 - பென்சில்வேனியாவின் லான்காஸ்டர் நகரம் இந்த ஒரு நாள் மட்டும் ஐக்கிய அமெரிக்காவின் தலைநகராக இருந்தது.
- 1821 - மெக்சிகோ, எசுப்பானியாவிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1825 - உலகின் முதலாவது பயணிகள் தொடருந்து இங்கிலாந்தில் சேவைக்கு விடப்பட்டது.
- 1854 - "எஸ்.எஸ். ஆர்க்டிக்" நீராவிக் கப்பல் அட்லாண்டிக் கடலில் மூழ்கியதில் 300 பேர் கொல்லப்பட்டனர்.
- 1893 - சிகாகோவில் இடம்பெற்ற உலகச் சமயங்களின் பாராளுமன்ற மாநாடு முடிவடைந்தது.
- 1905 - அல்பேர்ட் ஐன்ஸ்டைன் முதற்தடவையாக $E=mc^2$ என்ற சமன்பாட்டை அறிமுகப்படுத்தினார்.
- 1916 - எதியோப்பியாவில் இடம்பெற்ற அரண்மனைப் புரட்சியை அடுத்து இயாசு மன்னர் பதவியை இழந்தான்.
- 1928 - ஐக்கிய அமெரிக்கா சீனக் குடியரசை அங்கீகரித்தது.
- 1937 - கடைசி பாலிப் புலி கொல்லப்பட்டது.
- 1938 - ஆர்.எம்.எசு. குயின் எலிசபெத் பயணிகள் கப்பல் கிளாஸ்கோவில் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: வார்சா ஜேர்மனியிடம் சரணடைந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் கெசெல் நகர் மீது கூட்டுப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அமெரிக்கப் படைகளுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்திய தாக்குதல் ஆகும்.
- 1956 - அமெரிக்க வான்படைக் கப்டன் மில்பேர்ன் ஆப்ட் மாக் 3 ஐத் தாண்டிய முதல் நபர் என்ற பெயரைப் பெற்றார். சிறிது நேரத்தின் பின்னர் விமானம் கட்டுக்கடங்காமல் வீழ்ந்து நொறுங்கியதில் அவர் ஆப்ட் கொல்லப்பட்டார்.
- 1959 - ஜப்பானின், ஹொன்ஷு நகரில் இடம்பெற்ற புயலில் 5000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1964 - ஜான் எஃப். கென்னடியை லீ ஹாவி ஓசுவால்ட் என்பவன் வேறு எவரினதும் தூண்டுதல் இன்றிக் கொலை செய்ததாக வாரன் ஆணையம் அறிக்கை வெளியிட்டது.
- 1983 - இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பில் சிறை உடைப்பில் பல தமிழ் அரசியல் கைதிகள் தப்பி ஓடினர்.
- 1983 - ரிச்சார்ட் ஸ்டோல்மன் க்னூ செயற்றிட்டத்தைப் பகிரங்கமாக அறிவித்தார்.
- 1994 - மியான்மாரில் இராணுவ ஆட்சியை எதிர்க்க மக்களாட்சிக்கான தேசிய அமைப்பை ஓங் சான் சூகீ உருவாக்கினார்.
- 1993 - அப்காசியாவில் சுகுமியில் ஜார்ஜியப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்.
- 1997 - செவ்வாய் தளவுளவியுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.
- 1998 - கிளிநொச்சி நகரம் விடுதலைப் புலிகளினால் ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கை மூலம் வெற்றி கொள்ளப்பட்டது.
- 1998 - கூகிள் தேடுபொறி ஆரம்பிக்கப்பட்டது.
- 2002 - கிழக்குத் தீமோர் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.

பிறப்புகள்

- 1907 - பகத் சிங், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1931)
- 1924- தேவன் யாழ்ப்பாணம், ஈழத்து எழுத்தாளர் (இ. 1982)
- 1925 - ராபர்ட் எட்வர்ட்சு, பிரித்தானிய உயிரியலாளர் (இ. 2013)
- 1926 - ஜி. வரலட்சுமி, தென்னிந்திய நடிகை, பாடகி (இ. 2006)
- 1932 - ஒலிவர் வில்லியம்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பொருளியலாளர்
- 1932 - யஷ் சோப்ரா, பாக்கித்தானி-இந்திய இயக்குநர் (இ. 2012)
- 1933 - நாகேஷ், நகைச்சுவை நடிகர் (இ. 2009)
- 1984 - காயத்ரி ஜெயராமன், இந்தியத் திரைப்பட நடிகை

இறப்புகள்

- 1972 - சீர்காழி இரா. அரங்கநாதன், இந்தியக் கணிதவியலாளர் (பி. 1892)
- 1975 -டி. ஆர். சேஷாத்ரி, தமிழக வேதியலறிஞர் (பி. 1900)
- 1996 - முகமது நஜிபுல்லா, ஆப்கானிஸ்தானின் 7வது அரசுத்தலைவர் (பி. 1947)

சிறப்பு நாள்

- உலக சுற்றுலா நாள்




| மரக்கறி வகைகள் | திருநெல் வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 150 | 200 | 120 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 85 | 110 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 280 | 350 | 230 | 280 | 300 | 400 | 280 |
| தக்காளி | 160 | 200 | 100 | 120 | 140 | 200 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 60 | 40 | 60 | 80 | 60 | 80 |
| கோவா | 100 | 120 | 70 | 160 | 100 | 120 | 120 |
| கரட் | 100 | 200 | 80 | 180 | 150 | 200 | 100 |
| பூசணி | 50 | 30 | 30 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 100 | 100 | 50 | 120 | 60 | 180 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 80 | 80 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 240 | 250 | 160 | 240 | 40 | 240 | 250 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 75 | 120 | 100 | 120 | 130 |
| பாகற்காய் | 300 | 200 | 230 | 400 | 300 | 400 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 80 | 60 | 120 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 120 | 80 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 100 | 90 | 160 | 140 | 200 | 180 |
| பீற்றூட் | 50 | 50 | 30 | 40 | 150 | 180 | 60 |
| கறிமிளகாய் | 120 | 200 | 110 | 160 | 80 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 160 | 250 | 120 | 200 | 150 | 150 | 220 |
| போஞ்சி | 200 | 300 | 130 | 200 | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 120 | 160 | - | 140 | 140 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 20 | 30 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 280 | 200 | 200 | 300 | 350 | 400 | 260 |
| தேங்காய (ஒன்று) | 80 | 100 | 70 | 90 | 80 | 60-80 | 70 |
| இராசவள்ளி | 300 | 400 | 250 | - | 160 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 120 | 180 | - | 200 | 250 |
| முள்ளங்கி | 80 | 100 | 25 | 60 | 80 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 07 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 40 | 25 | 80 | 50 | 180 | 100 |

தர்மத்தின் வாழ்வுதனை சூதுகௌவும்
தர்மம் மறுபடியும் வெல்லும்.
~ பகவத்கீதை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ்ச் சட்டத்தரணிகளே! மௌனம் காப்பது முறையோ

கோவலனைக் கள்வன் என்று குற்றம் சாட்டி அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட செய்தியறிந்த கண்ணகி வீறுகொண்டு எழுகிறாள்.

பாண்டிய மன்னனின் அரண்மனை நோக்கிச் செல்கிறாள். யார் கள்வன்! என் கணவன் கள்வனா! கண்ணகியின் எழுவீச்சில் பாண்டிய மன்னன் பதறிப் போனான்.

தன் கணவன் கள்வன் அல்ல என்பதை கண்ணகி நிரூபித்த போது, மன்னன் பாண்டியன் நிலத்திடை வீழ்ந்து உயிர்துறந்து போகிறான். பாண்டிமாதேவி உயிர் துறக்கிறார். நாடு பற்றி எரிகிறது.

அட! இப்படியெல்லாம் நடப்பது நியாயமா? கண்ணகி செய்தது நீதியா? என்று கேட்பவர்கள் இந்த உலகம் இருக்கும் வரை இருக்கவே செய்வர்.

ஆனால் பாண்டிய நாட்டை கண்ணகி எரித்தாள் என்பதை விட, ஒரு நிரபராதி கொலை செய்யப்பட்ட அதர்மத்தால் பாண்டிய நாடு எரிந்தது என்று சொல்வதே பொருத்துடையது.

ஆம், பாண்டிய மன்னன் தவறான தீர்ப்பை வழங்குகிறான் என்றால்; அதற்கு மகாராணியும் மந்திரிகளும் அரண்மனை சேவகர்களும் மக்களும் காரணம் என்பதே உண்மை.

தவறான தீர்ப்பு வழங்கினால் மக்கள் தன்னைத் தண்டிப்பர், மந்திரிகள் வெறுப்பர் என்ற பயம் பாண்டிய மன்னனிடம் இருந்திருந்தால், கோவலனைக் கொல்லுமாறு பாண்டியன் தீர்ப்பளித்திருக்க மாட்டான். அந்தத் தீர்ப்பை வழங்கும் முன்னதாக பல தடவைகள் சிந்தித்திருப்பான்.

ஆனால் அந்தச் சிந்தனை இல்லாமல், ஒரு மனித உயிர் என்று நினைக்காமல், கள்வன் என்று கூறியதை அப்படியே செவிமடுத்து அவனைக் கொன்று விடு என்று கூறுகிறான் எனில், அந்தக் குற்றத்துக்கு பாண்டிய நாட்டவர்களும் காரணம்.

இதனால்தான் பாண்டிய நாட்டை கண்ணகி எரியூட்டினாள். தர்மம் பிழைத்தால், நீதி தவறினால் அதைப் பார்த்திருந்தவர்களும் தண்டனைக்குரியவர்கள் என்பதை நிரூபிக்கவே கண்ணகி கற்பெனும் அக்கினியால் பாண்டிய நாட்டை தீயிட்டாள் எனலாம்.

ஆக, அநீதி, அக்கிரமம், பொய், அதர்மம் ஏனும் பாவங்கள் அரங்கேறும் போதெல்லாம் அதைப் பார்த்திருப்பதும் பெரும் பாவம் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

எனவே, மரியாதைக்குரிய தமிழ்ச் சட்டத்தரணிகளே! ஒரு காலத்தில் தமிழ்ச் சட்டத்தரணிகள்தான் தமிழர்களின் அரசியல் உரிமைகளை உலகறியச் சொன்னார்கள். பாராளுமன்றத்தில் வலியுறுத்திப் பேசினார்கள். அந்த உயர்ந்த கலாசாரம் மீண்டும் பிறப்பெடுக்கட்டும்.

அரசியலமைப்புச் சீர்திருத்த இடைக்கால வரைபு வெளிவந்திருக்கும் இவ்வேளையில் அதன்மீது உங்கள் நிபுணத்துவம் ஊடுருவிப் பாயட்டும்.

தமிழ் மக்களுக்கு, அவர்கள் சந்தித்த இழப்புக்களுக்கு, எதிர்காலத்திலும் உரிமை என்று போராடாமல் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வரைபில் ஏதாவது உண்டா?

எதுவாக இருந்தாலும் நீங்கள் அனைவரும் ஒன்றுகூடி நிறுதிட்டமாக முடிவெடுத்து உங்கள் முடிவை அறிவியுங்கள்.

இந்தப்பணியை தமிழ் மக்களின் பெயரால் செய்வீர்கள் என நம்புகின்றோம். தயவுசெய்து மௌனம் கலையுங்கள்.

### பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பு

# வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் விளக்க அறிக்கை

பொது சுகாதார பரிசோதகர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்பு மற்றும் வெளியிடப்பட்டுவரும் ஊடக அறிக்கைகள் தொடர்பாக வட மாகாண சுகாதார அமைச்சின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பொது சுகாதார பரிசோதகர்கள் யாவர்க்குமான நியமன அதிகாரியாக விளங்குபவர் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆவார். நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட பின்னர் அவ் அலுவலர்களுக்கு வெற்றிடமுள்ள வேறு அமைச்சுக்கள்/திணைக்களங்களுக்கு அவர்களை விடுவிக்க முடியும். எனினும் இந்த அலுவலர்களின் சேவையில் உறுதிப்படுத்தல், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகளும் நியமன அதிகாரியினாலேயே மேற்கொள்ளப்பட முடியும். இது அரச நிர்வாகத்தின் அடிப்படை தெரிந்த சகலரும் அறிந்த விடயமாகும்.

இதனை விளங்கிக் கொள்ளாத அல்லது விளங்காதவர்கள்போன்று பாவனை செய்யும் சிலர் தமது சுயநல நோக்கங்களுக்காக நியமன அதிகாரியினால் வழங்கப்படும் இடமாற்றக் கட்டளையை புறக்கணிக்க முனைகின்றனர்.

இந்த வகையில் வட மாகாண சுகாதார அமைச்சின் நியமனத்துக்குட்பட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் சிலர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பணியாற்றும் வகையில் அந்த அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆயினும் அவர்களது பணி உறுதிப்படுத்தல், பதவி உயர்வுகள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவும் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட போது அவற்றை ஏற்றுக் கொண்டவர்கள் இடமாற்றத்தில் செல்ல விருப்பமற்ற நிலையில் வெவ்வேறு காரணங்களை வெவ்வேறு இடங்களில் முன்வைத்து பணிப்புறக்கணிப்பு மற்றும் பிரசாரங்களை செய்து வருகின்றனர்.

யாழ்.மாநகர சபையில் பணியாற்றுவதற்கென சுகாதார அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட அனுமதியுடன் உள்ளூராட்சி அமைச்சில் கடமையாற்றிய 5 பொது சுகாதார பரிசோதகர்கள் மீளவும் சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டமையை தவறென எடுத்துக்காட்டியே இப் போராட்டங்கள் இடம் பெறுகின்றன.

யாழ்.மாநகர சபையினால் மே மாதத்தின் தொடக்கத்தில் விடுவிப்பு வழங்கப்பட்டிருந்த நிலையில் இவர்கள் எந்தவொரு அலுவலகத்திலும் கடமைக்கு சமுகமளிக்காத நிலையில் சம்பளம் பெற முடியாதவர்களாக இருந்தனர். தொடர்ச்சியாக எங்கும் கடமையாற்றாத காரணத்தினால் இவர்கள் 5 பேருக்கும் நியமன அதிகாரியினால் பதவிவெறி தாக்குதல் கடிதம் வழங்கப்பட்டிருந்தது.

தற்போது இந்த 5 பொது சுகாதார பரிசோதகர்களில் தமது தவறினை உணர்ந்து இடமாற்றக் கட்டளைகளை ஏற்றுக் கொண்டு பதவியை மீளப் பெற்றுள்ளனர்.

நியாயமற்ற கோரிக்கையை முன்வைத்து இவர்கள் மேற்கொள்ளும் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையானது எவ்விதத்திலும் தீர்வாக அமையாது என்பதனையும் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன் என வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரனால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

## சுப்பிரமணியத்தின் நூற்றாண்டு விழா

அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகா சபை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அ.இ.சி.தமிழர் மகா சபையின் நீண்டகாலத் தலைவர் MC சுப்பிரமணியத்தின் நூற்றாண்டு விழா இன்று புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு றிம்மர் மண்டபத்தில் (யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகாமையில்) இடம்பெறவுள்ளது. (மு)

## நவராத்திரிப் பெருவிழா

இந்து வித்தியாவிருத்திச் சங்கத்துடன் ஏனைய இந்து நிறுவனங்களும் கலைத்துறை விற்பன்னர்களும் இணைந்துவழங்கும்"நவராத்திரிப் பெருவிழா",கடந்த 21-09-2017 வியாழக்கிழமை ஆரம்பமாகி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தினமும் மாலை 5.30 மணிக்கு பூஜை வழிபாட்டுடன் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்று வருகின்றது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் நடைபெறும் இப் பெருவிழாவில் இன்று புதன்கிழமை கொழும்பு நுண்கலைக்கோயில் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், நாளை பெஃவயர் கல்லூரி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், நாளை மறுதினம் இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஒழுங்கில் கலைநிகழ்ச்சிகளும் விஜயதசமி தினமாகிய எதிர்வரும் 30-09-2017 அன்று யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் கொழும்புச் சங்கத்தினர் வழங்கும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.(இ-3)

# ஆளுமையும் ஆற்றலும் வடக்கில் குறைகிறது

## போரால் இந்நிலை என்கிறார் ராஜித

(கரணவாய்)

30 வருடகால யுத்தத்தின் பின்னர் வடபகுதியிலே ஆளுமையும் ஆற்றலும் குறைந்து வருகிறது. அது நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். மருதங்கேணியில் புதிதாக அமைக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை அரசாங்கம் வடபகுதிக்கு2016ஆம்ஆண்டு 5 பில்லியனும் 2017 ஜூன் மாதம் வரை 3 பில்லியன் ரூபாவும் ஒதுக்கியுள்ளது. எந்த ஜனாதிபதியோ பிரதமரோ ஒதுக்காத அளவிற்கு மேல் மாகாண த்திற்கு அடுத்தபடியாக வடமாகாணத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுவர் வைத்திய சாலை மகப்பேற்று வைத்தியசாலை என்பன தனித்தனியாக அமைப்பதோடு புற்றுநோய் வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்படும்.

ஐந்து மாவட்டங்களிற்கும் இரத்த வங்கி நிறுவப்படும் வவுனியாவில் விசேடமாக சிறுநீரக வைத்திய சாலை அமைக்கப்படும்.

கடந்த வாரத்திலே இலங்கை சரித்திரத்திலே முதன் முறையாக அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து நல்லிணக்கத்திற்கான சமிக்ஞையை வெளிப்படு த்தி உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 28.09. 2017 வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் ஒலுமடு, சேனைப்புலவு, ஒதியாமலை, பட்டிக்குடியிருப்பு, மருதோடை, கற்குளம், கோவில்புளியங்குளம், நெடுங்கேணி மொபிட்டல் கோபுரம், நெடுங்கேணி நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## நவராத்திரி பாமாலை

கல்விக்கு இன்று முதலாம் நாள்



### சான்றோனாய் ஆக்கிடுவாய்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
தாயவளே எந்தனுக்கு தந்திடுவாய்– நேயமுடன்
நின்பாதம் தொட்டு நிதமும் நான் பூஜிப்பேன்
உன்னருளைத் தாராய் உவந்து.

பள்ளிச் சிறுவர்நாம் பக்தியுடன் உன்தனையெம்
உள்ளமதில் வைத்துநிதம் உவந்துநாம் பூஜிப்போம்
தெள்ளுதமிழ் கலைஞானம் தெளிந்தநல் வித்தைகளையும்
அள்ளியே வழங்கிடுவாய் அம்பிகையே உன்தாள் அடைக்கலமே

நான்முகன் நாயகியே நம்பியுனைத் தொழுவேன்
வான்முகில் போன்றெனக்கு வரகவியைப் பொழியவைப்பாய்
ஆன்மீக வாழ்வும்தந்து அடியேனை ஆதரித்தென்றும்
சான்றோனாய் ஆக்கிவைப்பாய் சரஸ்வதியே சரணம் அம்மா

வே.இராமர்
கைதடி நாவற்குழி.

# கொடுக்குளாய் சக்திவேல் வி.க. நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி





## இறுதிப் போட்டியில் றேஞ்சர்ஸ்



கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் 25.09.2017 அன்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியாக உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 0-0 என்று போட்டியானது சம நிலையில் முடிவடைய தண்ட உதை வழங்கப்பட்டது.

தண்ட உதையில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக வீரர் ரவி வர்மன் தெரிவாகியுள்ளார். (க)

# வடமாகாண மகுடம் பலாலி விண்மீன் அணியிடம் வீழ்ந்தது திக்கம் இளைஞர் அணி



இறுதிவரை போராடி பலாலி விண்மீன் அணியிடம் வீழ்ந்தது திக்கம் இளைஞர் அணி. திக்கம் இளைஞர் அணியின் போராட்டம் வீண் இறுதிவரை பரபரப்பாக போட்டி முடிவுற்றது.

"வடமாகாண மகுடம்" மின்னொளியிலான உதைபந்தாட்டத் தொடரினை மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியான அழைக்கப்பட்ட முன்னணி கழகங்களுக்கிடையில் நடத்துகின்றது. அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் பரபரப்பான லீக் சுற்றுத் தொடரின் மூதலாம் நாள் போட்டிகள் 23-09-2017 அன்று சனிக்கிழமை இரவு 8-00 மணியளவில் கழக மைதானத்தில் இடம்பெற்றது. பரபரப்பாக ஆரம்பமாகிய போட்டி இறுதி நிமிடம் வரை தொடர்ந்தது பலாலி வீண்மீன் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதியது. இரு அணியின் முன்கள வீரர்களின் சிறப்பான ஆட்டம் மாறி மாறி கோல்மழை பொலிந்தனர். முதல்பாதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணி 4-0 என்ற கோல்கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாம் பாதியாட்டத்தில் திக்கம் இளைஞர் கோல்மழை பொலிந்தபோதும் வெற்றி பெறமுடியவில்லை. இறுதியாக ஆட்டம் முடியும் போது 5-4 என்ற கோல் கணக்கில் திக்கம் இளைஞர் அணியை வீழ்த்தி பலாலி வீண்மீன் அணி லீக் சுற்றுப் போட்டியில் தனது முதலாவது வெற்றியை பெற்றது. (க)

# சம்பியனாகியது வலைப்பாடு ஜெகமீட்பர்



கிளிநொச்சி உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 24.9.2017 அன்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து கிளிநொச்சி கனகபுர அணி மோதியது. இரு அணிகளும் தலா 1 கோலினை போட்டு சமன் செய்தனர்.

இறுதியில் சமநிலை தவிர்ப்பு மூலம் 5.4 என்ற கோள்கணக்கில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது வலைப்பாடு ஜெகமீட்பர் அணி. (க)

# அதிரடி கோல்கள் மூலம் வீழ்ந்தது வடமராட்சி இமையாணன் மத்தி



மன்னார் யோசப்வாஸ் தோட்டவெளி ஐக்கிய வீரர்களின் அதிரடி கோல்கள் மூலம் வீழ்ந்தது வடமராட்சி இமையாணன் மத்தி அணி. மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியான அழைக்கப்பட்ட முன்னணி கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் பரபரப்பான லீக் சுற்றுத் தொடரின் மூதலாம் நாள் போட்டிகள் கடந்த சனிக்கிழமை இரவு 8-00 மணியளவில் கழக மைதானத்தில் இடம்பெற்றது. பரபரப்பாக ஆரம்பமாகிய போட்டியில் மன்னார் யோசப்வாஸ் தோட்ட வெளி ஐக்கிய அணியை எதிர்த்து வடமராட்சி இமையாணன் மத்தி அணி மோதியது.

மன்னார் யோசப்வாஸ் தோட்டவெளி ஐக்கிய அணியின் முன்கள் வீரர்களின் சிறப்பான ஆட்டம் வெற்றியை உறுதி செய்தது. இறுதியாக ஆட்டம் முடியும் போது 5-1 என்ற கோல்கணக்கில் வடமராட்சி இமையாணன் மத்தி அணியை வீழ்த்தி மன்னார் யோசப்வாஸ் தோட்டவெளி அணி லீக் சுற்றுப் போட்டியில் தனது முதலாவது வெற்றியை பெற்றது. (க)

# இறுதிப் போட்டியில் வீனஸ்



மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்துச் சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டியில் மானிப்பாய் சரவணாநாஸ் அணியையும் அரையிறுதிப் போட்டியில் சாவகச்சேரி இந்து அணியையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது வீனஸ் விளையாட்டுக் கழகம். (க)

# இறுதிப் போட்டிக்கு நுழைந்தது செம்பியன்பற்று சென்.பிலிப்பினேரீஸ்





கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் 25.09.2017 அன்று நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியாக பறந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து செம்பியன்பற்று சென்.பிலிப்பினேரீஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 0-0 என்று போட்டியானது சம நிலையில் முடிவடைய தண்ட உதை வழங்கப்பட்டது.

தண்ட உதையில் சென். பிலிப்பினேரீஸ் விளையாட்டுக் கழகத்தினர் 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.பிலிப்பினேரீஸ் விளையாட்டுக் கழக வீரன் கிருபா தெரிவாகியுள்ளார். (க)



## இளைஞர்களின்...

வீதியில் நேற்று நண்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் யாழ்.வீதியை சேர்ந்த வீரசிங்கம் சின்னத்தம்பி (வயது 78) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் மதிய உணவு உண்பதற்காக ஒஸ்மானியா கல்லூரிக்கு அருகில் வசிக்கும் தனது ஒரே ஒரு மகளுடைய வீட்டுக்கு செல்வதை வழக்கமாக கொண்டுள்ளார்.

அதே போன்று நேற்று நண் பகல் அந்த வீதி வழியாக துவிச் சக்கர வண்டியில் சென்றுள்ளார். பின்னர் ஒஸ்மானியா கல்லூரிக்கு முன் ஒரு முச்சக்கர வண்டி அருகே இறங்கி நின்றுள்ளார்.

அச்சமயம் அதிவேகத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் வீதிக்கு குறுக்காக சென்ற நாயுடன் மோதி நாய்க்கு மேலாக சென்று அருகில் இருந்த முச்சக்கர வண்டியுடன் மோதியுள்ளனர்.

அதே வேகத்தில் அருகில் நின்ற முதியவர் 8 மீற்றர் தூரம் இழுத்து செல்லப்பட்டு வீதியிலே இருந்த கற் தூணுடன் மோதி தலையில் படுகாயம் அடைந்த நிலையில் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர், இரண்டு மணித்தியாலங்களுக்கு பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேற்குறித்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார்.

விபத்தை ஏற்படுத்திய இரு இளைஞர்களும் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். அவர்கள் மோதிய நாய் அதே இடத்தில் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-9,30)

## வித்தியா: தீர்ப்பு...

த்தில் வசித்து வந்த பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா, கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலை செல்லும் வழியில் காடையர்களால் கடத்தப்பட்டு, பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டிருந்தார். (மு-9)

## தமிழ் மக்களு...

னவே தவிர அவற்றில் எந்தவித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தியாகி திலீபனின் 30ஆவது ஆண்டு நினைவஞ்சலி உணர்வு பூர்வமாக நல்லூரில் அமைந்துள்ள அவரது நினைவுத்தூபியில் இடம்பெற்றிருந்தது. இவ் அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து அங்கு இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சுரேஸ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது,

தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பசி தமிழ் மக்களினுடைய உரிமைகள் என்ற விடயம் போன்றன 30 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் அவை பின்நோக்கி நகர்த்தப்பட்டுள்ளனவே தவிர அவற்றில் எந்தவித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை.

இந்த அரசாங்கம் தமிழ்மக்களுடைய உரிமை தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு கொடுத்த உறுதி மொழிகள் ஐ.நா மனித உரிமை ஆணையகத்திற்கு கொடுத்த உறுதிமொழிகள் இவை யாவுமே காற்றில் பறக்கவிடப்பட்டு இன்று இடைக்கால அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வான அதிகாரப் பகிர்வு இந்த அறிக்கையில் உண்டு எனக் கூறப்பட்டாலும் ஒற்றையாட்சி என்பதற்குள் வடக்கு வேறு கிழக்கு வேறாக பிரிக்கப்பட்ட ஒரு விடயத்திற்குள் தான் இந்த அதிகாரப் பகிர்வு என்ற விடயம் உள்வாங்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு இணைக்கப்படக் கூடாது என்பதில் அவர்கள் தீவிரமாக இருக்கின்றார்கள். அதே போன்று ஒன்றையாட்சி என்பதிலும் தீவிரமாக இருக்கின்றார்கள். பௌத்தத்திற்கு முன்னுரிமை அளிப்பதிலும் தீவிரமாக இருக்கின்றார்கள்.

13+ திருத்தச் சட்டம் தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ காலத்தில் இருந்தே கூறப்பட்டு வந்தது. இந்த 13+ திருத்தச் சட்டம் என்பது கூட ஒற்றையாட்சிக்குள் இரண்டாவது சபை ஒன்றை அதாவது பாராளுமன்றத்தில் இரண்டாம் சபையாகசெனற் சபையைக் கொண்டு வருவதன் ஊடாக இந்த 13ஆவது திருத்தத்தை மேலதிக திருத்தியுள்ளோம் எனக் கூறுகின்றார்கள். ஆனால் இச் செனற்சபையில் 45 பேரில் 5 அல்லது 6 பேர்தான் தமிழர்களாக இருப்பார்கள். மீதி அனைவரும் சிங்களவர்களாக இருப்பார்கள். அவர்கள் அனைவரும் மாகாண சபை உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள். 10 பேரை பாராளுமன்றம் தெரிவு செய்வதாக இருக்கும். அவ்வாறு காணப்படின் இவ் செனற் சபையினாலும் கூட தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு எந்தவிதத் தீர்வும் கிடைக்கப்போவதில்லை. இது மகிந்த ராஜபகஷவின் ஆட்சிக் காலத்தில் எம்மால் நிராகரிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் இன்றைய தலைமைகள் ஏன் இதனை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பது தான் புரியாத புதிராகவுள்ளது.

ஆகவே நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து தமிழ் மக்களினுடைய உரிமைகளை வென்றெடுக்கவேண்டும். அவர்கள் இம் மண்ணில் சுதந்திரமாக மரியாதையாக வாழக்கூடிய ஓர் சூழல் ஏற்படுத் தப்படவேண்டும். அத்தகைய அதிகாரங்களைக் கொண்ட ஒரு சக்தியாக தமிழ் மக்கள் இருக்கின்ற போது தான் அவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும் எனத் தெரிவித்தார். (மு-4)

## கிளி.யில் ரயில் மோதி...

சிதறி பலியாகி உள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6. 30, மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

புகையிரதத்தினால் மோதுண்டு பலியான நபரின் சடலத்தை உத்தர தேவி புகையிரதத்திலேயே ஏற்றிக் கொண்டு சென்று கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் ஒப்படைத்து விட்டு புகையிரதம் தொடர்ந்து காங்கேசன்துறை நோக்கி பயணத்தை தொடர்ந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் விபத்தில் இறந்தவர் யார் என அடையாளம் காண்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் சடலத்தை மீட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக் காக ஒப்படைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (மு-15,312)

## எங்கள் தாயக...

இலங்கையில் சைவசமயமே ஆதிச் சமயமாகும். இதற்கான சான்றாதாரங்கள் நிறையவே உண்டு.

எனினும் சைவசமயத்தை நிந்தித்து அதனைப் புறந்தள்ளுவதில் பேரினவாதம் வலிந்துகட்டி நிற்கிறது.

தமிழ் அரசியல்வாதிகள் பௌத்தத்திற்கு முன்னுரிமை என்று பிரதமரிடம் கூறியிருக்கலாம். ஆனால் அதைக் கூறுவதற்கான அதிகாரத்தை தமிழ் மக்கள் அவர்களுக்கு வழங்கவில்லை.

எங்கள் தாயக மண்ணில் எங் கள் பூர்வீக சமயமாகிய சைவ சமயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இதற்காக அனைத்து இந்து – சைவசமய பீடங்கள், அமைப்புக்கள், ஆலய நிர்வாகிகள் ஒன்று கூடி தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறி விக்கவுள்ளன.

இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி ஆகியோருக்கும் மனு அனுப்பி வைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக இந்து அமைப்புகள் சார்ந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந)

## தியாக தீபம்...

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து மரணித்த தியாக தீபம் திலீபனின் 30-வது ஆண்டு நினைவு நேற்றைய தினம் தாயகம் எங்கும் பேரெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் முன்னாள் போராளி ஒருவர் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் காவடி எடுத்துள்ளார். இந்த நெகிழ்ச்சியான சம்பவம் நேற்றைய தினம் நல்லூரில் நடைபெற்றுள்ளது.

நீண்ட காலத்தின் பின்னர் திலீபனின் இந்த நிகழ்வுகளால் தமிழர் தாயகமே நேற்றைய தினம் எழுச்சி கொண்டது. பிரதான நிகழ்வாக நல்லூரில் அஞ்சலி நிகழ்வுகள் புரட்சி பாடல்களுடன் நடைபெற்றன. இதனோடு யாழ்.பல்கலைக்கழகத்திலும் எழுச்சியுடன் நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. நல்லூரில் நடைபெற்ற நிகழ்வில் ஆரம்ப நிகழ்வு நல்லூரின் வடக்கு வீதியில் தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்த இடத்தில் அவரது உயிர் பிரிந்த நேரம் காலை 10.58 மணிக்கு குறித்த இடத்தில் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதன் போது குறித்த இடத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் அந்த இடத்தில் பல மணி நேரம் திரண்டிருந்தார்கள். இதனை அடுத்து ஊர்வலமாக திலீபனது நினைவு தூபி அமைந்துள்ள இடத்தை நோக்கி வந்தார்கள். நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு பின்புறமாக அமைந்துள்ள நினைவுத் தூபியில் மு.ப 11.10 மணிக்கு ஆரம்பமாகின. அங்கு பொது ஈகைச் சுடர் ஏற்றல், மலர் மாலை அணிவித்தல், மலர வணக்க நிகழ்வுகள், உயிர்த்தியாகம் செய்த மாவீரர்கள் பொது மக்களுக்கு அகவணக்கம், நினைவுரைகள், கவிதாஞ்சலி நிகழ்வு எனும் ஒழுங்கில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது கைதடியில் இருந்து ஆரம்பித்த குறித்த காவடி நல்லூரை வந்தடைந்து அங்குள்ள திலீபனது நினைவு தூபிக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள். இந்த உணர்வு பூர்வமான தருணம் அங்கிருந்தவர்களை கண்ணீர் சிந்த வைத்தது. (மு-4)

# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 400 கிலோ கடல் வெள்ளரி பறிமுதல்

(கொழும்பு)

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த சுமார் 400 கிலோ எடையுள்ள கடல் வெள்ளரிகள் இராமேஸ்வரத்தில் பறிமுதல் செய்யப்பட்டன. இவை, இராமேஸ்வரத்தின் திறப்பன் வலசை என்ற கிராமத்தில் உள்ள தென்னந்தோப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் கடத்தல் முயற்சியில் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வனத் துறையினருக்குக் கிடைத்த தகவலின் பேரிலேயே இந்தச் சோதனை நடத்தப்பட்டிருந்தது. பறிமுதல் செய்யப்பட்ட கடல் வெள்ளரியின் பெறுமதி சுமார் பன்னிரண்டு இலட்சம் ரூபா என்று தெரியவந்துள்ளது.

அரிய வகை உயிரினமாக விளங்கும் கடல் வெள்ளரிகளை உற்பத்தி செய்வதும் அனுமதியின்றி விற்பனை செய்வதும் சட்டப்படி குற்றமாகும். (மு-11)

## கூட்டமைப்பும்...

ஜீ.எல் பீரிஸ் இதனை தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் தேர்தல்கள் இல்லை என அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (மு-11)

## முள்ளிவாய்க்காலில்...

இது தொடர்பில் அவர் பொலிஸாருக்கு உடனடியாக அறிவித்த நிலையில், பொலிஸார் தலத்திற்கு விரைந்து அங்கு காணப்படும் கைக்குண்டுகளை அகற்றி அழிப்பதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. (மு-11)

## அதிரடிப்படை...

பலர் அச்சத்துடன் அங்கிருந்து திரும்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அப்பகுதியிலுள்ள வீதியால் போக்குவரத்துச் செய்பவர்கள் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (மு-11)

## சுங்கத் திணைக்கள...

கப்பட்டுள்ளார்.

நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள் சமரவீரவின் பரிந்துரைக்கமைய உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் தற்போதைய பணிப்பாளராக கடமையாற்றும் சூலாநந்த பெரேரா அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சிரேஷ்ட செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதையடுத்தே குறித்த பதவி வெற்றிடத்துக்கு திருமதி சார்ள்ஸ் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## விக்னேஸ்வரன்...

யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வட மாகாண முதலமைச்சரின் உடலில் முக்கிய இடத்தில் ஏற்பட்டுள்ள கட்டியை அகற்றுவதற்கு சத்திர சிகிச்சை நடைபெற்று தற்போது இருதய சிகிச்சை விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வடக்கு முதலமைச்சர் விடுமுறை கோரியபோதும், யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கின்ற காரணத்தினால் இதுவரை பதில் முதலமைச்சராக எவரையும் நியமனம் செய்யவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (மு-11)


## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 06, கொய்யாத்தோட்டம் புதுவீதி, ஆதன இல 49A என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் லீனஸ் பெண் மேரி மார்கிறற் என ஆதன வரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் பாசையூர் புதுவீதி கொய்யாத்தோட்டம் 49ம் இலக்கத்தைச் சேர்ந்த அப்புசாமி பேபியன்ஸ் உம் பெண் திரேஸ் உம் பிரசித்த நொத்தாரிசு ரி.எம்.அந்தோனிப்பிள்ளை முகதாவில் 2126ம் இலக்க 2003.09.25ஆம் திகதிய பிரகடன உறுதியில் குறித்த ஆதனத்துக்கான உறுதி அண்மைக்கால இடப் பெயர்வுகளின் போது தவறவிடப்பட்டதாகவும் இன்றுவரை எங்கு தேடியும் கிடைக்கவில்லை என்று பிரகடனப்படுத்தி இதே நொத்தாரிசு முகதாவில் 2127ம் இலக்க 2003/09/26ம் திகதிய நன்கொடை உறுதிமூலம் அப்புசாமி பேபியன்ஸ் உம் பெண் திரேஸ் உம் அவர்களது மகன் பேபியன்ஸ் டன்சியஸ் மதிவாணனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்: வட மாகாணம், யாழ்.மாவட்டம், யாழ்ப்பாண பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று சுண்டுக்குளி (தற்போது கொய்யாத்தோட்டம்) இறை "கூகை மாவடியிற் புளரும் முதலிப்புலமும் நொச்சிக்கடையும்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் க.பஞ்சாச்சரம் அவர்களின் வரைபட இலக்கம் 3150/2003.03.27இல் துண்டு - 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 3 குளி 9.63 ஆகும். இதற்கு எல்லை

கிழக்கு :- ஒழுங்கை
வடக்கு :- தேவராஜா யூலியற்றுக்கும் அன்ரன் ஆன்சலாவுக்கும்
மேற்கு :- S.R. ஞானப்பிரகாசம் பெண் றீற்றா வரோனிக்காவும் மறுபேருக்கும்
தெற்கு :- புதுவீதி கொய்யாத்தோட்டம்

தற்போது இவ் ஆதனத்தை பேபியன்ஸ் டன்சியஸ் மதிவாணன் என்னும் பெயரில் எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் உரிய ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்து ஆதனமானது பேபியன்ஸ் டன்சியஸ் மதிவாணன் என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

(C-9756)

# முந்துங்கள்
முதல் முப்பது பேருக்கே இந்த வாய்ப்பு




கட்டார் முன்னணி போக்குவரத்து சேவை நிறுவனத்தில்

**Taxi Driver - சாரதி வெற்றிடம்**

QR 1200 (49,200 இலங்கை ரூபா) + கமிஷன்

இலங்கை, கட்டார், GCC சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆங்கிலத்தில் ஓரளவு உரையாடக்கூடியவர்களுக்கு முன்னுரிமை

வயதெல்லை 21 – 45

நேர்முகத் தேர்வு நாளை செப். 28 வியாழன் 9 மணி

Terms & Conditions
- 2 வருட ஒப்பந்தம்
- தங்குமிடம், மருத்துவ வசதி
- இலவச விமானச்சீட்டு

உடன் பதிவுசெய்ய ☎ 0773616798

(C-9759)

TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222

SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS 175, 1ம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11



## SB Travels and Tours Pvt Ltd

இல. 212 கஸ்தூரியார் வீதியில் இயங்கி வரும் SB Travels and Tours Pvt Ltd இப்போது விசேட விலைக் கழிவுகளுடனான விமான பயணச் சீட்டுக்களை வழங்குகின்றது. விசா விண்ணப்பப்படிவம் 150/= நிரப்பி தரப்படும். Budjet Airlinesல் மதுரை சென்னை ரூ.23500 இலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 021 222 9555, 021 222 8555, 076 691 1080, 81, 076 691 1082, 83, 077 711 1228

(C-9717)



## NEW SCIENCE HALL

Kannathiddy Road, Jaffna.

DAY BATCH

**Chemistry**

Tamil & English Medium

Revision & Short Notes Class

| | | | |
|---|---|---|---|
| Mon, Fri | - | 3.30 - 5.30 | - Inorganic |
| Thurs | - | 3.30 - 5.30 | - Organic |
| Sat, Sun | - | 11.30 - 1.30 | - Physical |

Commence On - 02.10.2017

By : G.BENO (B.Sc, PGDE)

(C-9745)



விற்பனைக்கு

தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக் கோயிலில் பழைய சித்திரத்தேர் ஒன்று விற்பனைக் குண்டு.

தொடர்பு : 021 222 9310 077 160 7121

(807)



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


## அனைவரும் ஒன்றிணைக – ரணில் வேண்டுகோள்

(கொழும்பு)

கருத்தாடல்கள் மற்றும் அபிப்பிராயங்களின் அடிப்படையில் அரசியலமைப் பொன்றை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென பிரதமர் ரணில் விக்ரமசிங்க கேட்டுக்கொண்டார்.

நவராத்திரி பூஜையை முன்னிட்டு கொழும்பு நகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள 39 கோவில்களுக்கு நிதி உதவி வழங்கும் வைபவத்தில் பிரதமர் உரையாற்றினார். இந்நிகழ்வு நேற்று பிற்பகல் அலரிமாளிகையில் நடைபெற்றது.

சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன், மேல் மாகாண ஆளுநர் சிவலோக நாதன், சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (மு-11)


**JCB**

விற்பனைக்குண்டு (698)

தொடர்பு : 0774801734



## Science corner, Jaffna

G.C.E (A/L) வகுப்புக்கள்

| Combined maths | Chemistry |
|---|---|
| Mr.B.Mayuran(B.sc) | Mr.J.Uthayan (B.sc.Hons,P.G.D.F, M.sc) |
| A/L 2019- sat,sun-10.00-11.30 | A/L 2019 - Sat, Sun8.30 - 10.00 a.m Mon, Wed - 3.30 - 5.00 p.m |
| A/L 2018-sat,sun-11.30-1.00 Tues,Thur 3.30 - 5.00 | A/L 2018 Sat, Sun - 10.00 - 11.30 am Fri - 1.00 - 3.30 pm |
| Paper class-mon, wed,fri 3.30-5.00 | Paper class -11.30 am - 1.00 pm (Sat, Sun) 3.30-5.00 pm (Tues, Thur) |

Group class மாணவர்களின் விரும்பிய நேரத்தில் ஒழுங்கு செய்யப்படும் 0776569576,0772247592

(677)



## உடனடி வேலை வாய்ப்பு V2 TRAVELS

(C-9678)




விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை

நீண்ட காலமாக வேலை தேடுபவரா?

எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்

5,000/= (பயிற்சியின் போது) //15,000/= (பயிற்சியின் பின்னர்)

நேர்முகத் தேர்வின் ஊடாகத் தெரிவு செய்யப்படும்

இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்க்கின்றோம்.

தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226241



## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9677)



கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப

CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


# கண்ணீர் அஞ்சலி

பூவுலகில் மலர்வு 25 . 10 . 1951

பூவுலகை விட்டு உதிர்வு 24 . 09 . 2017



எங்கள் அன்புத்தெய்வம் "அன்ரி" (சிற்றன்னை)

## அமரர் தம்பிராசா நாகேஸ்வரி

அவர்களின் பிரிவில் ஈர விழிகளின் இரங்கல்

பாலகராய் எம் மறுவரை
பரிதவிக்க விட்டுவிட்டு
எம் அன்னை எமைவிட்டு
நிரந்தரமாய் பிரிந்த போது
தாயே!!!
நீவிர் உடனே ஓடி வந்து
உன் கைகளில் ஏந்தியணைத்து
உயிர் கொடுத்த தெய்வமே
எம் அன்ரி ..!!!(சிற்றன்னை)
அறுவர் நாம் உந்தனிடத்திநின்றே
அன்னை அன்பையும் அறுசுவை உணவையும்
ஆசி உரைகளுடன் நிந்தன் வழிநடத்தலையும்
அள்ளி அள்ளி வழங்கிய அன்புத்தெய்வமே
ஆறுதே இல்லை எம் மனம்
ஆறுதல் கூறிடும் எம் தெய்வமே
உமைப்போல எமக்கினி ஆருளர் ??? தாயே
அன்பு மழை தூவி எமை வளர்த்த தெய்வமே
உந்தன் ஆத்மா சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்



அன்னாரின் ஈமக்கிரியைகள் 28.09.2017 (வியாழக்கிழமை) காலை 9.30 மணியளவில் இல.28, உடுவில் வீதி, மானிப்பாயில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

(C-9761)

"மிலேனியம் ஹெஸ்ற்கவுஸ்" இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும் : பெறாமகள் – சாந்தி, மருமகன் – சுகு, பேரப்பிள்ளைகள் – நிவேஷ், பானு அத்துடன் ரூபன், ஜெயம், ஜெயந்தி, சிவா, கஜா

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.